1937-ம் ஆண்டு முதல் 1961-ம் ஆண்டு வரை
ஏழாயிரம் பக்கங்களில் ஏழு பாகங்களாக
வெளிவந்த முதல் தமிழ் தஃப்ஸீர்

தப்ஸீருல் ஹமீத்
ஃபீ தஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

3-ம் பாகம்

இரண்டு சூராக்கள் கொண்டது

ஆசிரியர்
சன்மார்க்க மூதறிஞர், அல்லாமா, மர்ஹூம்,
எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்)
உத்தமபாளையம்

வெளியீடு
பனைக்குளம்
ஹாஜி. சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷுஜப்
கோலாலம்பூர், மலேஷியா.

A2

ஐந்தாம் சூரத்து

சூரத்துல் மாயிதா

இது மதீனாவில் இறங்கியது

ஒரு நூற்று இருபது ஆயத்துகள் கொண்டது

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

(இம்மையில் யாவருக்கும்) கருணை புரிபவனும், மறுமையில் (தன் நல்லடியார்களுக்கு மட்டும்) அருள்பாலிப்பவனுமான அல்லாஹ்வின் (திருப்) பெயரால் (இதை ஓத ஆரம்பஞ் செய்கின்றேன்).

يَٰٓأَيُّهَا الَّذِينَ آمَنُوٓا أَوْفُوا بِالْعُقُودِ ۚ أُحِلَّتْ لَكُم بَهِيمَةُ الْأَنْعَامِ إِلَّا مَا يُتْلَىٰ عَلَيْكُمْ غَيْرَ مُحِلِّي الصَّيْدِ وَأَنتُمْ حُرُمٌ ۗ إِنَّ اللَّهَ يَحْكُمُ مَا يُرِيدُ ①

1. ஈமான் கொண்டவர்களே, உடன்படிக்கைகளை நிறைவேற்றுங்கள். நீங்கள் இஹ்ராம் கட்டியிருக்கும் போது, வேட்டையாடுவதை ஹலாலாக்கிக் கொள்ளாத நிலையில் - உங்கள் மீது ஓதப்பட்டதைத் தவிர, (மற்றைய) நாற்கால் பிராணி உங்களுக்கு (ப் புசிக்க) ஹலாலாக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் அவன் நாடியதைக் கட்டளையிடுவான்.

அல்பஹீமத் என்பது நான்கு கால்களையுள்ள பிராணியைக் குறிக்கிறது.

الْاَنْعَامِ **அல்அன்ஆம்** என்பது நான்கு கால்களையுள்ள பிராணிகளைப் பொதுவாகக் குறிப்பிடும். ஆயினும், செம்மறி ஆடு, வெள்ளாடு, மாடு, ஒட்டகம் ஆகிய நான்கு வகைப் பிராணிகளிலுமுள்ள ஆண் பெண் ஆகிய இரண்டு இனங்களையும் குறிப்பிடும். எனவே, இந்தப் பதத்தை **அல்பஹீமத்** என்னும் பதத்துடன் இணைத்திருப்பதால் இவ்விரு பதங்களுக்கும் நாற்கால் பிராணிகளில் செம்மறி ஆடு, வெள்ளாடு, மாடு, ஒட்டகம் ஆகிய நான்கு வகை மிருகங்களில் ஆண் பெண் ஆகிய இரண்டு இனங்களும் என்பது கருத்து.

لْعُقُوْدِ **அல்உக்கூது** என்பது **அல்அக்து** என்பதன் பன்மைச் சொல். இது மனிதர்கள் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உடன்படிக்கை, ஒரு காரியத்தைச் செய்வதாக மனிதர்கள் தாங்களாகச் செய்து கொள்ளும் உடன்படிக்கை, அல்லாஹுத்தஆலா தனது அடியார் களுக்கு விதித்துள்ள கடமைகள் முதலியவற்றை எல்லாம் குறிக்கும்.

إِلَّا مَا يُتْلَىٰ عَلَيْكُمْ **உங்கள் மீது ஓதப்பட்டதைத் தவிர** என்ற ஆயத்தின் கருத்து யாதெனில், இந்த சூரத்தின் மூன்றாவது ஆயத்தில் தானாகச் செத்தது, பன்றியின் மாமிசம் முதலியவற்றைப் புசிக்கக் கூடாது என்றும், அவ்வாறு புசிப்பது ஹராம் என்னும் கட்டளையிடப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்த ஆயத்தில் ஹராம் என்று விலக்கி இருப்பவற்றைத் தவிர மற்றைய பிராணிகளைப் புசிப்பது ஹலாலாகும்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ لَا تُحِلُّوا۟ شَعَٰٓئِرَ ٱللَّهِ وَلَا
ٱلشَّهْرَ ٱلْحَرَامَ وَلَا ٱلْهَدْىَ وَلَا ٱلْقَلَٰٓئِدَ وَلَآ
ءَآمِّينَ ٱلْبَيْتَ ٱلْحَرَامَ يَبْتَغُونَ فَضْلًا مِّن رَّبِّهِمْ

وَرِضْوَٰنًا ۚ وَإِذَا حَلَلْتُمْ فَٱصْطَادُوا۟ ۚ وَلَا يَجْرِمَنَّكُمْ
شَنَـَٔانُ قَوْمٍ أَن صَدُّوكُمْ عَنِ ٱلْمَسْجِدِ ٱلْحَرَامِ أَن
تَعْتَدُوا۟ ۘ وَتَعَاوَنُوا۟ عَلَى ٱلْبِرِّ وَٱلتَّقْوَىٰ ۖ وَلَا تَعَاوَنُوا۟
عَلَى ٱلْإِثْمِ وَٱلْعُدْوَٰنِ ۚ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۖ إِنَّ ٱللَّهَ شَدِيدُ
ٱلْعِقَابِ ۝٢

2. ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வின் அடையாளங்களை நீங்கள் ஹலாலாக்கிக் கொள்ளாதீர்கள். இன்னும் கண்ணியமான மாதத்தையும், குர்பானிப் பிராணிகளையும், (குர்பானியை) அடையாளமிடப்பட்டவைகளையும், தங்களுடைய றப்பிடமிருந்து இலாபத்தையும் பொருத்தத்தையும் நாடியவர்களாக கண்ணியமான வீட்டை நாடியவர்களையும் (நீங்கள் ஹலாலாக்கிக் கொள்ளாதீர்கள்). ஆனால் நீங்கள் (இஹ்ராமை) அவிழ்த்துக் கொண்டீர்களானால், நீங்கள் வேட்டையாடிக் கொள்ளுங்கள். இன்னும் ஒரு கூட்டத்தார் உங்களை மஸ்ஜிதுல் ஹராமை விட்டுத் தடுத்ததற்காக (உங்களுக்கு அவர்கள்) மீதுள்ள கோபம் நீங்கள் வரம்பு மீறும்படி உங்களைச் செய்திட வேண்டாம். மேலும், நன்மையிலும், தக்வாவிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். ஆனால், பாவத்திற்கும், அநியாயத்துக்கும் நீங்கள் ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம். இன்னும், அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் (தனக்கு மாறு செய்பவர்களை) வேதனை செய்வதில் கடினமானவன்.

شَعَٰٓئِرَ ٱللَّهِ **(ஷஆஇரல்லாஹி)** அல்லாஹ்வின் அடையாளங்கள் என்பன இரண்டு வகை. ஹஜ்ஜுக் கிரியைகளில் அறஃபாவில் தங்க வேண்டியஇடம், மினாவில் மூன்று ஜிமார்களில் கல்லெறியுமிடங்கள், கஃபத்துல்லாவை தவாஃபு செய்யுமிடம், ஸஃ

செய்யுமிடம் ஆகிய இடங்களைக் குறிப்பிடுவது ஒருவகை. இஹ்ராம் கட்டி இருத்தல், தவாஃபு செய்தல், ஸஈ செய்தல், இஹ்ராமை அவிழ்ப்பதற்காக சவரம் செய்வித்துக் கொள்ளல், குர்பானி கொடுத்தல், ஆகிய செய்கைகள் மற்றொரு வகை. இவ்விரு வகைகளும் இங்கு நாடப்பட்டிருக்கின்றன.

الشَّهْرَ الْحَرَامَ **(அஷ்ஷஹ்ருல் ஹராம்)** கண்ணியமான மாதம் என்பது துல்கஅதா, துல்ஹஜ்ஜு, முஹர்ரம், ரஜப் ஆகிய நான்கு மாதங்களையும் குறிக்கும். இந்நான்கு மாதங்களில் அரபியர்கள், கொள்ளை கொலை முதலிய காரியங்களைச் செய்வதில்லை. யுத்தங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தாலுங்கூட இம்மாதங்கள் பிறந்து விட்டால், யுத்தத்தை நிறுத்தி விடுவது அவர்களது வழக்கமாக இருந்தது.

ஹத்யுன் என்பது **ஹதீயத்துன்** என்பதின் பன்மைச் சொல், கஃபாவிற்குக் காணிக்கையாக அனுப்புகிற ஒட்டகை, ஆடு, மாடு ஆகியவற்றிற்கு இப்பதம் பயன்படுத்தப்படுகிறது.

கலாயிது என்பது **கலாதத்** என்பதன் பன்மைச் சொல். கஃபாவிற்குக் காணிக்கையாக அனுப்பப்பட்ட மிருகம் என்பதற்கு அடையாளமாக அப்பிராணியின் கழுத்தில் ஹரமிலுள்ள மரத்தின் தொலி முதலியவற்றைக் கட்டிவிடுவது வழக்கம். இவ்விதமான அடையாளமிடப்பட்ட பிராணியை அறபியர் தொந்தரவு செய்வது மில்லை, அதனை ஹரமுக்குச் செல்லவிடாமற் றடுப்பதுமில்லை.

இந்த ஆயத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திரு மக்காவில் ஹத்தீமில் இருந்தபோது அருளப்பட்டது. இதன் விபரம் வருமாறு:- பக்ரீ கோத்திரத்தைச் சேர்ந்த ஷுறைஹுப்னுலபீஆ என்பவன் யமாமாவிலிருந்து சிலருடன் மதீனா முனவ்வராவிற்கு வந்தான். ஆனால் தன்னுடன் வந்த மற்றவர்களை எல்லாம் மதீனாவிற்கு வெளியில் இருக்கச் செய்துவிட்டு, அவன் மட்டும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "தாங்கள் ஜனங்களை எந்தக் காரியத்தின்பால் அழைக்கிறீர்கள்?" என்று வினவினான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள் "லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவை அங்கீகரித்து விண்ணப்பம் செய்தல், தொழுகையை நிறைவேற்றல், நோன்பு நோற்றல், ஜக்காத்துக் கொடுத்தல் ஆகிய காரியங்களின் பால் அழைக்கிறேன்" என்று கூறினார்கள். அதற்கவன், "நல்லது, என்றாலும், எனக்குப் பல தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களை விட்டு விட்டு எக்காரியத்தையும் நான் செய்வதில்லை. நான் இஸ்லாத்திற் சேர்ந்து விடக்கூடும். அவர்களையும் அழைத்துக் கொண்டு வரமுடியும்" என்று கூறிவிட்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது திருச் சபையை விட்டு வெளியேறினான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இவன் வருவதற்கு முன்னதாகவே தங்களது ஸஹாபாக்களிடம் "உங்களிடம் ஒரு மனிதன் வந்து ஷைத்தானுடைய நாவினால் பேசுவான்" என்பதாகக் கூறி இருந்தார்கள். இவன் வந்து விட்டுப்போன பிறகு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இவன் காஃபிரான முகத்தைக் கொண்டு வந்தான். மோசமான கருத்துடன் செல்கிறான். இம்மனிதன் முஸ்லிம் அல்ல" என்று கூறினார்கள். இவன் தனது துணைவர்களிடம் சென்றதும் மதீனாவிற்கு வெளியிலுள்ள ஈத்தந்தோட்டங்களிற் புகுந்து பல மரங்களை வெட்டிவிட்டுச் சென்றுவிட்டான். இவனைப் பிடிப்பதற்காக ஸஹாபாக்கள் பின்றொடர்ந்தனர். ஆயினும், இவன் தப்பி விட்டான்.

பிறகு, அடுத்த வருடத்தில் யமாமாவிலிருந்து வந்த பக்கருப்னுவாயில் என்பவரின் ஹாஜிகளுடன் இவனும் சேர்ந்து ஹாஜியாக மக்காவிற்கு வந்தான். இவனுடன் வியாபார பொருட்களும் ஏராளமாக இருந்தன. இவனும் இவனுடன் வந்தவர்களும் கஃபாவில் அறுப்பதற்காக பல பிராணிகளையும் இந்த ஆயத்திற் குறிப்பிட்டிருக்கிற விதமாக அடையாளமும் இட்டுக் கொண்டு வந்திருந்தனர். அப்பொழுது முஸ்லிம்கள் "இதோ ஷுறைஹ் வந்துவிட்டான். எங்களையும் அவனையும் விட்டு விடுங்கள்" என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அனுமதி கோரினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இவன் ஹத்யுக்களுக்கு அடையாள மிட்டிருக்கிறான்" என்றார்கள். அதற்கு

முஸ்லிம்கள் "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது இஸ்லாத்திற்கு முந்தியுள்ள ஜாஹிலிய்யத்தான காலத்தில் நாங்கள் செய்து கொண்டிருந்த காரியம்" என்று கூறினார்கள். ஆனால், நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம்களது விருப்பத்திற்கு இணங்கவில்லை. இச்சமயத்தில் இந்த ஆயத்து அருளப்பட்டது. அக்காலத்தில், முஷ்ரிக்குகளும் ஹஜ்ஜுக்கு வருவதும், குர்பானி கொடுப்பதும் வழக்கமாக இருந்தது. இவ்வருடத்திற்குப் பிறகு முஷ்ரிக்குகள் வரக்கூடாது என்ற கட்டளை பிறந்த பிறகுதான் முஷ்ரிக்குகள் தடுக்கப்பட்டனர்.

ஹஜ்ஜுக் கிரியைகளிலும், அவற்றை நிறைவேற்ற வேண்டிய இடங்களிலும் அல்லாஹுத்தஆலாவின் அடையாளங்களாக இருப்பவற்றையும், கண்ணியமான மாதங்களையும், குர்பானிக்காக விடப்பட்டுள்ள பிராணிகளையும், பைத்துல்லாவிற்கு ஹஜ்ஜுக்காக அல்லது உம்ராவிற்காக வருபவர்களையும் கௌரவிக்க வேண்டும். குர்பானி மிருகங்களை துன்புறுத்தவோ, தடுக்கவோ கூடாது, ஹஜ்ஜுக்கு வந்திருப்பவர்களை துன்புறுத்தக் கூடாது, கண்ணியமான மாதங்களில் சண்டை சச்சரவு செய்யலாகாது. இஹ்ராமை அவிழ்த்துவிட்ட பின் நீங்கள் மிருகங்களை வேட்டையாடிக் கொள்ளலாம், ஒருவர் மீதுள்ள கோபத்திற்காக அவர்கள் மீது நீங்கள் அக்கிரமம் செய்யலாகாது, நன்மையான காரியங்களிலும், இறைவனுக்குப் பயபக்தி செலுத்துவதிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும், தீமை, அக்கிரமம் ஆகிய காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவி புரியக் கூடாது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

حُرِّمَتْ عَلَيْكُمُ الْمَيْتَةُ وَالدَّمُ وَلَحْمُ الْخِنْزِيرِ وَمَا
أُهِلَّ لِغَيْرِ اللَّهِ بِهِ وَالْمُنْخَنِقَةُ وَالْمَوْقُوذَةُ
وَالْمُتَرَدِّيَةُ وَالنَّطِيحَةُ وَمَا أَكَلَ السَّبُعُ إِلَّا مَا
ذَكَّيْتُمْ وَمَا ذُبِحَ عَلَى النُّصُبِ وَأَنْ تَسْتَقْسِمُوا

بِالْأَزْلَامِ ذَٰلِكُمْ فِسْقٌ الْيَوْمَ يَئِسَ الَّذِينَ كَفَرُوا مِنْ
دِينِكُمْ فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِ الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ
دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ
لَكُمُ الْإِسْلَامَ دِينًا فَمَنِ اضْطُرَّ فِي مَخْمَصَةٍ
غَيْرَ مُتَجَانِفٍ لِإِثْمٍ فَإِنَّ اللَّهَ غَفُورٌ رَحِيمٌ ③

3. (தானாகச்) செத்ததும், இரத்தமும், பன்றியின் இறைச்சியும், (அறுக்கும்போது) அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறப்பட்(டு அறுக்கப்பட்)டதும், குரல் வளையை நெறித்துக் கொல்லப்பட்டதும், (கொம்பு போன்றவற்றால்) அடித்துக் கொல்லப்பட்டதும், (உயரத்திலிருந்து) விழுந்து செத்ததும், (ஒன்றுக் கொன்று) முட்டிச் செத்ததும், கொடிய மிருகம் புசித்ததும், உங்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறது. (ஆனால் உண்ண அனுமதிக்கப்பட்டவற்றில் அவை உயிரோடிருந்து பிஸ்மில்லாஹ் சொல்லி) நீங்கள் அறுத்ததைத் தவிர (அவற்றை உண்ணலாம்) நடப்பட்டவை (களான கற்) களுக்காக அறுக்கப்பட்டதும், உங்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறது. (கட்டையுருட்டிப் பார்ப்பதாகிய) இது (அல்லாஹ்விற்குக் கீழ்ப்படியாமல்) மீறுவதாக இருக்கிறது. காஃபிராகிவிட்டார்களே அவர்கள் உங்களது (சன்) மார்க்கத்தை விட்டு இன்றைய தினம் நிராசையாகி விட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். இன்னும் என்னை நீங்கள் அஞ்சுங்கள். இன்றைய தினம் உங்களுடைய (சன்)மார்க்கத்தை உங்களுக்குப் பூர்த்தி செய்தேன். இன்னும், எனது அருட்கொடையை உங்களுக்கு நிரப்பமாக்கினேன். இன்னும், உங்களுக்கு இஸ்லாமை (சன்) மார்க்கமாகப் பொருந்திக்

கொண்டேன். ஆனால், எவர் பசியில் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறாரோ, பாவத்தின்பால் சாயாதவராக இருக்கிற நிலையில் (அவர் தேவையான அளவிற்கு மட்டும் புசிக்கலாம்). ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்பவன். (இன்னும்) கிருபை செய்பவன்.

الْمَيْتَةُ அல்மைத்தது என்பது அறுக்கப்படாமல் செத்தது, **الدَّمُ அத்தமு** என்பது ஆடு முதலியவற்றை அறுப்பதன் மூலம் அவற்றிலிருந்து வெளிப்பட்டு ஓடுகிற இரத்தம்.

தானாகச் செத்தது, இரத்தம், பன்றியின் மாமிசம், அல்லாஹுத்தஆலாவின் பெயர் கூறாமல் மற்றவைகளின் பெயர்களைக் கூறி அறுக்கப்பட்டது ஆகியவற்றின் மாமிசங்களைப் புசிக்கக்கூடாது, மனிதர் மூலமாகவோ அல்லது கன்னியில் மாட்டிக் கொண்டதன் மூலமாகவோ குரல்வளை நெறிந்து செத்தது, கல், தடி முதலியவற்றால் அடிபட்டுச் செத்தது, உயரத்திலிருந்து விழுந்து செத்தது, ஒன்றுக் கொன்று முட்டிக் கொள்வதால் செத்தது, கொடிய மிருகம் புசித்துச் செத்தது ஆகியவற்றின் மாமிசங்களைப் புசிக்கக் கூடாது. ஆனால், இம்மிருகங்களின் உயிர் போவதற்கு முன் இவற்றைச் சட்டப்படி அறுத்து விட்டால் இவற்றின் இறைச்சியைப் புசிப்பது குற்றமில்லை. நடப்பட்ட கற்களுக்காக அறுக்கப்பட்ட வைகளைப் புசிப்பதும் கூடாது. அதாவது கஃபத்துல்லாவைச் சுற்றிலும் கற்கள் நட்டு வைக்கப் பட்டிருந்தன. அக்கற்களுக்குப் பக்கத்தில் தங்கள் விக்கிரகங் களுக்காகப் பிராணிகளை அறுத்து, அவற்றின் இரத்தத்தை அக்கற்களின் மீது பூசுவது முஷ்ரிக்குகளின் வழக்கம். ஆகவே, இவ்வாறு செய்யப்பட்ட பிராணியின் இறைச்சியை அருந்துவதும் கூடாது.

முற்காலத்தில் கஃபாவில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகங் களுக்குப் பூஜை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த பூஜாரியிடத்தில் சில கட்டைகளிருந்தன. அவற்றில் “ஆம்” என்று ஒரு கட்டையிலும், “இல்லை” என்று மற்றொரு கட்டையிலும் எழுதப்பட்டிருக்குமாம். “எனது நாயன் என்னை இப்படிச் செய்யும்படி கட்டளையிட்டான்” என்று

ஒரு கட்டையிலும், “எனது நாயன் இப்படிச் செய்யும்படி ஏவவில்லை” என்று மற்றொரு கட்டையிலும் எழுதப்பட்டிருக்குமென்றும் ஒரு ரிவாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமான கட்டைகள் மூன்று இருக்கு மென்றும், ஏழு இருக்கு மென்றும் கூறப்படுகிறது. ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமாயின் அக்காலத்திலுள்ள முஷ்ரிக்குகள் இக்கட்டைகளை உருட்டிக் குறிபார்ப்பது வழக்கம். அக்காரியத்தைச் செய்யும்படி அக்கட்டைகளின் மூலம் வெளியானால், செய்வர். செய்ய வேண்டாம் என்று வெளியானால், செய்ய மாட்டார்கள். இவ்விதமாகக் குறி பார்ப்பதும் கூடாது. ஆனால், தாங்கமுடியாத பசியுண்டாகி, இனி ஒன்றையும் புசிக்காமலிருந்தால் பிழைக்க முடியாது என்றிருந்தால், உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மேலே விலக்கப்பட்டுள்ள பிராணிகளின் இறைச்சியைப் புசித்தேனும், உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் புசிப்பது பாவமல்ல. இதனை அல்லாஹுத்தஆலா மன்னித்துக் கொள்வான் என்பன இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட கட்டளைகள்.

காஃபிராகிவிட்டார்களே அவர்கள் உங்களது (சன்) மார்க்கத்தைப் பற்றி இன்றைய தினத்தில் நிராசையாகி விட்டார்கள். ஆகவே, அவர்களை நீங்கள் அஞ்சாதீர்கள். இன்னும், என்னை நீங்கள் அஞ்சுங்கள். இன்றைய தினம் உங்களுடைய (சன்) மார்க்கத்தை உங்களுக்கு நான் பூர்த்தி செய்துவிட்டேன். இன்னும், எனது அருட்கொடையை உங்களுக்கு நான் நிரப்பமாக்கி விட்டேன். உங்களுக்கு இஸ்லாமை (சன்) மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்

என்ற வாக்கியம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ்ஜுக்கு வந்திருந்தபோது, துல்ஹஜ்ஜு மீ 9 அறஃபாவின் நாளன்று வெள்ளிக்கிழமை அஸருக்குப் பிறகு அறஃபாத் மைதானத்தில் அருளப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹுத்தஆலா வாக்குறுதி அளித்ததை அவன் நிறைவேற்றிவிட்டான், இஸ்லாம் மார்க்கம் நன்கு பரவிவிட்டது, அதனைத் தடுக்க முடியாது என்பதை முஷ்ரிக்குகள் உணர்ந்து தங்களது எதிர்ப்பை அடியுடன் கைவிட்டனர். இதனைக்குறித்து “காஃபிராகி விட்டார்களே அவர்கள் உங்கள் (சன்) மார்க்கத்தைப் பற்றி

இன்றைய தினம் நிராசையுள்ளவர்களாகி விட்டனர்'' என்ற வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஃபாயிதா:- "இந்த மார்க்கத்தை எனக்கு நான் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறேன். தயாளமும் நல்லொழுக்கமும் தவிர வேறு எதுவும் இதற்கு தகுதியாக இல்லை. ஆகவே, நீங்களிருக்கும் காலமெல்லாம் இவ்விரண்டையுங் கொண்டு இந்த மார்க்கத்தை மகிமைப் படுத்துங்கள்'' என்று அல்லாஹுத்தஆலா கூறினான் என்பதாக ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் கேட்டேன் என்பதாக ஜாபிருப்னு அப்தில்லாஹி ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ رَجُلًا مِنَ الْيَهُوْدِ
قَالَ لَهُ يَا اَمِيْرَ الْمُؤْمِنِيْنَ آيَةٌ فِى كِتَابِكُمْ تَقْرَؤُوْنَهَا لَوْ
عَلَيْنَا مَعْشَرَ الْيَهُوْدِ نَزَلَتْ لَاتَّخَذْنَا ذٰلِكَ الْيَوْمَ عِيْدًا قَالَ
اَيُّ آيَةٍ قَالَ (اَلْيَوْمَ اَكْمَلْتُ) اَلْخ قَالَ عُمَرُ قَدْ عَرَفْنَا
ذٰلِكَ الْيَوْمَ وَالْمَكَانَ الَّذِىْ نَزَلَتْ فِيْهِ عَلَى النَّبِيِّ صَلَّى
اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ قَائِمٌ بِعَرَفَةَ يَوْمَ الْجُمُعَةِ اَشَارَ عُمَرُ
اِلَى اَنَّ ذٰلِكَ الْيَوْمَ كَانَ عِيْدًا لَنَا

ரிவாயத்து:- ஒரு யூதர் ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடம் வந்து "அமீருல் மூமினீன் அவர்களே! உங்களுடைய வேதத்தில் ஒரு ஆயத்து இருக்கிறது. அதனை நீங்கள் ஓதுகிறீர்கள். யூதர்களாகிய எங்களுக்கு அது அருளப்பட்டிருக்குமாயின் அது அருளப்பட்ட தினத்தை நாங்கள் பெருநாளாகக் கொண்டாடுவோம்'' என்று கூறினார். அதற்கு, ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அவரை நோக்கி "அது எந்த ஆயத்து'' என்பதாக வினவினார்கள். அதற்கவர் "இன்றையதினம்

உங்களுக்கு உங்களது (சன்) மார்க்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன்'' என்ற ஆயத்து என்பதாகக் கூறினார். அப்பொழுது, ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் "அந்த நாளையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்பட்ட இடத்தையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். வெள்ளிக்கிழமையன்று அறஃபாவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருக்கும்போது இது அருளப்பட்டது'' என்பதாகக் கூறினார்கள்.

قَالَ ابْنُ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا كَانَ ذٰلِكَ الْيَوْمُ خَمْسَةَ
اَعْيَادٍ جُمُعَةٌ وَعَرَفَةُ وَعِيْدُ الْيَهُوْدِ وَالنَّصَارٰى وَالْمَجُوْسِ
وَلَمْ تَجْتَمِعْ اَعْيَادُ اَهْلِ الْمِلَلِ فِى يَوْمٍ قَبْلَهُ وَلَا بَعْدَهُ

ரிவாயத்து:- இந்த ஆயத்து அருளப்பட்ட தினம் ஐந்து வகையில் பெருநாளாக இருந்தது. அறஃபாவின் நாள், வெள்ளிக் கிழமை, யூதர், கிறிஸ்துவர், மஜூஸியர் ஆகிய மூவகுப்பினருக்கும் அன்றைய தினம் பெருநாளாக இருந்தது. இவ்விதமாக ஐந்து வகைப் பெருநாள்கள் ஒரே தினத்தில் பல மதத்தினருக்கும் இதற்கு முன்னும் ஒன்று சேரவில்லை, இதற்குப் பின்னும் ஒன்று சேராது என்பதாக இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- இந்த ஆயத்து அருளப்பட்டபோது ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அழுதார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "உமரே! உம்மை அழச் செய்தது எது?'' என்பதாக வினவினார்கள். அதற்கு உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் "நாம் நமது மார்க்கத்தில் மென்மேலும் அதிகமாகிக் கொண்டே இருந்தோம். அது பூர்த்தியாகி விட்டது. ஒரு பொருள் பூர்த்தியாகி விட்டால் இனி அது குறையும் என்பது தான் என்னை அழச் செய்தது'' என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் "உண்மையுரைத்தீர்'' என்று கூறினார்கள்.

இந்த ஆயத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வஃபாத்தைக் குறித்து முன்னறிவிப்புச் செய்வதாக இருந்தது. இந்த ஆயத்து அருளப்பட்ட பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (81) எண்பத்தோரு நாள் இவ்வுலகில் வாழ்ந்து ஹிஜ்ரீ, 12ம் வருடம் ரபீஉல் அவ்வல்மீ 12 திங்கட்கிழமை வஃபாத்தானார்கள்.

يَسْـَٔلُونَكَ مَاذَآ أُحِلَّ لَهُمْ ۖ قُلْ أُحِلَّ لَكُمُ ٱلطَّيِّبَٰتُ ۙ وَمَا عَلَّمْتُم مِّنَ ٱلْجَوَارِحِ مُكَلِّبِينَ تُعَلِّمُونَهُنَّ مِمَّا عَلَّمَكُمُ ٱللَّهُ ۖ فَكُلُوا۟ مِمَّآ أَمْسَكْنَ عَلَيْكُمْ وَٱذْكُرُوا۟ ٱسْمَ ٱللَّهِ عَلَيْهِ ۖ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۚ إِنَّ ٱللَّهَ سَرِيعُ ٱلْحِسَابِ ④

4. அவர்கள் தங்களுக்கு ஹலாலாக்கப்பட்டது எதுவென்பதாக (நபியே) உம்மை வினவுகின்றார்கள். உங்களுக்கு நல்லவைகளும், உங்களுக்கு அல்லாஹ் கற்றுக் கொடுத்ததிலிருந்து, அவற்றிற்கு நீங்கள் கற்றுக் கொடுத்துப் பழக்கி இருக்கிற வேட்டையாடும் பிராணிகளிலிருந்து நீங்கள் கற்றுக் கொடுத்திருக்கிறீர்களே அது (வேட்டையாடியது) வும் உங்களுக்கு ஹலாலாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உங்களுக்காக அவைகள் தடுத்துக் கொண்டதிலிருந்து நீங்கள் புசியுங்கள். இன்னும், அல்லாஹ்வின் பெயரை (வேட்டைக்காக நீங்கள் அனுப்புகிற பிராணியாகிய) அதன் மீது நீங்கள் கூறுங்கள். இன்னும், அல்லாஹ்விற்கு நீங்கள் பயபக்தி செலுத்துங்கள். நிச்சயமாக அல்லாஹ் கணக்கு வாங்குவதில் தீவிரமானவன்.

ٱلْجَوَارِحِ **அல்ஜவாரிஹ்** என்பது **ஜாரிஹத்துன்** என்பதன் பன்மைச் சொல். வேட்டையாடும் பிராணி என்பதாக இப்பதத்திற்குப் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், இப்பதம் நாய், புலி முதலிய மிருகங்களையும், இராஜாளி முதலிய பறவைகளையும் குறிக்கும். மிருகங்களை அல்லது பறவைகளை வேட்டையாடிக் கொன்று

தின்னக்கூடிய மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் இப்பெயர் பொதுவானது.

அல்முகல்லபீன என்பது **கல்பு** என்ற சொல்லிலிருந்து பிறந்த சொல்லாகும். இதற்குப் பழக்கப்பட்டது என்பது பொருள். வேட்டையாடுவதை அதிவிரைவில் பழகிக் கொண்டு அதன்படி ஒழுங்காக நடப்பதில் நாய் சிறந்த பிராணியாக இருப்பதால் கல்பு (நாய்) என்ற பதத்திலிருந்து பிறந்திருக்கிறது.

فَكُلُوا۟ مِمَّآ أَمْسَكْنَ عَلَيْكُمْ ஆகவே, உங்களுக்காக **அவைகள் தடுத்துக் கொண்டதிலிருந்து நீங்கள் புசியுங்கள்** என்பதற்கு வேட்டையாடப் பட்ட பிராணியை வேட்டையாடிய பிராணி தின்னாமல் விட்டு வைத்தால் அந்தப் பிராணியின் மாமிசத்தைப் புசிக்கலாம் என்பது கருத்து. ஆனால் வேட்டையாடப்பட்ட பிராணியை வேட்டையாடிய பிராணி தின்று விட்டால் அதில் எஞ்சியதைப் புசிக்கக் கூடாது என்பது மார்க்கச் சட்ட அறிஞர்களிற் பெரும்பாலரது கருத்து. இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும், இன்னும் சில அறிஞர்களும், இதில் சிறிது வித்தியாசப் பட்டிருக்கிறார்கள். அதாவது நாய் வேட்டையாடி வேட்டையாடப்பட்ட பிராணியைத் தின்னத் தொடங்கிவிட்டால், அப்புறம் அப்பிராணியின் மாமிசத்தைப் புசிக்கக் கூடாது. ஏனெனில், வேட்டையாடப்பட்ட பிராணியைத் தின்னாமலிருக்கும்படி நாயை அடித்துப் பழக்க முடியும். ஆனால், பறவைகளை அவ்வாறு அடித்துப் பழக்க முடியாது. ஆதலால், பறவைகள் வேட்டையாடி வேட்டையாடப்பட்ட பிராணியைத் தின்ன ஆரம்பித்து விட்டால், அதனைப் புசிப்பது குற்றமில்லை என்பது இவர்களது கருத்து.

وَٱذْكُرُوا۟ ٱسْمَ ٱللَّهِ عَلَيْهِ **இன்னும் அதன்மீது அல்லாஹ்வின் பெயரை நீங்கள் கூறுங்கள்** என்பதற்கு வேட்டையாடுவதற்காக வேட்டை மிருகங்களை அனுப்பும்போது அவற்றின் மீது பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொல்லி அனுப்பவேண்டும் என்பது கருத்து. இந்த ஆயத்திற்கு மற்றொரு விதமான கருத்து முண்டு. அதாவது, வேட்டையாடப்பட்ட பிராணியை

அவைகள் தின்னாமல் விட்டு வைத்திருந்தால் அப்பிராணியை தக்பீர் சொல்லி அறுத்துப் புசியுங்கள் என்பதே.

اَلْيَوْمَ اُحِلَّ لَكُمُ الطَّيِّبٰتُ ۗ وَطَعَامُ الَّذِيْنَ اُوْتُوا
الْكِتٰبَ حِلٌّ لَّكُمْ ۖ وَطَعَامُكُمْ حِلٌّ لَّهُمْ ۖ وَالْمُحْصَنٰتُ
مِنَ الْمُؤْمِنٰتِ وَالْمُحْصَنٰتُ مِنَ الَّذِيْنَ اُوْتُوا
الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ اِذَاۤ اٰتَيْتُمُوْهُنَّ اُجُوْرَهُنَّ مُحْصِنِيْنَ
غَيْرَ مُسٰفِحِيْنَ وَلَا مُتَّخِذِيْۤ اَخْدَانٍ ۗ وَمَنْ يَّكْفُرْ
بِالْاِيْمَانِ فَقَدْ حَبِطَ عَمَلُهٗ ۖ وَهُوَ فِى الْاٰخِرَةِ مِنَ
الْخٰسِرِيْنَ ۝٥

5. இன்றைய தினம் உங்களுக்கு (உணவுகளில்) நல்லவைகள் ஹலாலாக்கப்பட்டிருக்கின்றன. இன்னும், வேதத்தைக் கொடுக்கப்பட்டார்களே அவர்களுடைய உணவு உங்களுக்கு ஹலாலாகும். இன்னும், உங்களுடைய உணவு அவர்களுக்கு ஹலாலாகும். இன்னும், ஈமான் கொண்டுள்ள பெண்களிலிருந்தும் (அடிமையாக இல்லாத) சுதந்திரமான பெண்களும், உங்களுக்கு முன்னர் வேதத்தைக் கொடுக்கப்பட்டார்களே அவர்களிலிருந்து (அடிமையாக இல்லாத) சுதந்திரமான பெண்களும், பகிரங்கமாக விபச்சாரம் செய்யாமலும், இரகசியமாக விபச்சாரம் செய்யாமலும் திருமணம் செய்கிறவர்களாக இருக்கிற நிலையில் அவர்களுடைய கூலிகளை அவர்களுக்கு நீங்கள் கொடுத்து விட்டீர்களானால் (உங்களுக்கு ஹலால்). தவிர, எவர் ஈமான் கொண்டு (பின்னர்) காஃபிராகி விடுகின்றாரோ அவருடைய (நற்)கிரியைகள் அழிந்து விடுகின்றன. இன்னும், அவர் மறுமையில் நஷ்டவாளர்களில் உள்ளவராயிருக்கிறார்.

وَالْمُحْصَنٰتُ **அல்முஹ்ஸனாத்து** என்ற பதத்திற்கு ஸூரத்துன்னிஸா 24வது ஆயத்திலும் விரிவுரை செய்யப்பட்டிருக்கிறது. அதாவது. கணவனுள்ள பெண்கள் என்பது கருத்து. மார்க்கத்திற்கு ஆகாத காரியத்தில் ஈடுபடுவதை விட்டு அந்த பெண்களை திருமண பந்தம், அல்லது கணவன், அல்லது அந்த பெண்களின் காரியஸ்தர்கள் கட்டுப் படுத்தி வைத்திருப்பதால், கற்புடைய பெண்கள் யாவருக்கும் இந்தப் பெயர் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், கற்புள்ள பெண்கள் என்பதற்கு அடிமையாக இல்லாத பெண்கள் என்பதும் கருத்து. முஸ்லிமாக இருக்கிற அடிமைப் பெண்களையும், கற்பில்லாத பெண்களையும் திருமணம் செய்வது ஆகும். அப்படி இருந்தும் அடிமையாக இல்லாமலும் கற்புள்ள வளுமான பெண்ணை மட்டும் இங்கு கூறியிருப்பதானது இவ்விதமான பெண்களை திருமணம் செய்வதுமேல் என்பதை அறிவுறுத்துவதற் காகவேயாகும். வேதக்காரர்களிலுள்ள அடிமைப் பெண்கள் முஸ்லிம் அடிமைப் பெண்களைப்போலவே என்பது இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களது கருத்து. ஷாஃபிஈ மதுஹபு இந்த கருத்தை அங்கீகரிக்கவில்லை.

முற்காலத்தில் விபச்சாரம் இரண்டு வகையாக இருந்தது. பகிரங்கமாக விபச்சாரம் செய்தல் ஒருவகை. இதற்கு **ஸஃபாஹ்** என்று பெயர். இரகசியமாக விபச்சாரம் செய்தல் மற்றொரு வகை. இதற்கு **இத்திகாதுல் குத்ன்** என்று பெயர். ஆகவே, இவ்விரு வகை விபச்சாரங்களும் இந்த ஆயத்தின் மூலம் தடுக்கப்பட்டிருக்கின்றன.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا
وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ
وَاَرْجُلَكُمْ اِلَى الْكَعْبَيْنِ ۗ وَاِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوْا
وَاِنْ كُنْتُمْ مَّرْضٰۤى اَوْ عَلٰى سَفَرٍ اَوْ جَآءَ اَحَدٌ مِّنْكُمْ

مِّنَ الْغَآئِطِ اَوْ لٰمَسْتُمُ النِّسَآءَ فَلَمْ تَجِدُوْا مَآءً
فَتَيَمَّمُوْا صَعِيْدًا طَيِّبًا فَامْسَحُوْا بِوُجُوْهِكُمْ وَاَيْدِيْكُمْ
مِّنْهُ ؕ مَا يُرِيْدُ اللّٰهُ لِيَجْعَلَ عَلَيْكُمْ مِّنْ حَرَجٍ وَّلٰكِنْ
يُّرِيْدُ لِيُطَهِّرَكُمْ وَلِيُتِمَّ نِعْمَتَهٗ عَلَيْكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ⑥

6. ஈமான் கொண்டவர்களே தொழுகையில் நீங்கள் நின்றீர்களாயின், உங்களது முகங்களையும், முழங்கையுள்பட உங்களது கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். இன்னும் உங்களது தலைகளை (ஈரக்கைகளால்) தடவிக் கொள்ளுங்கள். இன்னும், இரண்டு கரண்டைகள் உள்பட உங்களது இரு கால்களையும் (கழுவிக் கொள்ளுங்கள்). மேலும், பெருந்தொடக்குள்ளவர்களாக நீங்கள் இருந்தால், நீங்கள் ரொம்பச் சுத்தஞ் செய்து கொள்ளுங்கள். தவிர நோயாளிகளாக அல்லது பிரயாணத்தின் காரணமாக நீங்கள் இருந்தால், அல்லது உங்களில் ஒருவர் கழிவறைக்குச் சென்று வந்தால், அல்லது பெண்களை நீங்கள் தீண்டினால், தண்ணீரை நீங்கள் பெற்றுக் கொள்ளாவிடில், சுத்தமான மண்ணை நீங்கள் நாடிக் கொள்ளுங்கள். அப்புறம், அதனால் உங்களது முகங்களையும் உங்களது கைகளையும் தடவிக் கொள்ளுங்கள். சிரமத்தை உங்கள் மீது ஏற்படுத்த அல்லாஹ் நாடவில்லை. என்றாலும், உங்களை அவன் சுத்தப்படுத்தவும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும், தன்னுடைய அருட்கொடையை உங்களுக்கு அவன் நிரப்பமாக்கவுமே நாடுகிறான்.

اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ "**தொழுகைக்கு நீங்கள் நின்றீர்களானால்**" என்பதற்கு தொழுக நீங்கள் விரும்பினால் என்பது கருத்து. فَاطَّهَّرُوْا "ரொம்பச் சுத்தஞ் செய்து கொள்ளுங்கள்" என்பதற்கு நீங்கள் குளித்து கொள்ளுங்கள் என்பது கருத்து.

الْغَآئِطِ **அல்காயித்** என்பது மல ஜல உபாதைகளைக் கழிக்குமிடம். மலஜல உபாதைகளுக்குச் செல்வதன் மூலம் மனிதர்கள் சிறு தொடக்கு உள்ளவர்களாக ஆகிவிடுகிறார்கள். சிறு தொடக்குள்ளவர்கள் ஒலு அல்லது தயம்மம் இல்லாமல் தொழுகையை நிறைவேற்றக் கூடாது.

لٰمَسْتُمُ النِّسَآءَ **லா மஸ்துமுன்னிஸாஅ** அதாவது, பெண்களைத் தீண்டினால் என்பது பெண்களுடன் உடலுறவு கொண்டால் என்பதை சமிக்ஞையாக அறிவிக்கிறது.

فَلَمْ تَجِدُوْا مَآءً **தண்ணீரை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லையானால்** என்பதற்கு தண்ணீரை உபயோகிப்பதற்கு இயலவில்லையானால் என்பது கருத்து.

தொழுக விரும்புபவர் முதலில் ஒலுச் செய்து கொள்ள வேண்டும். அதாவது முகத்தையும், முழங்கையுட்பட இரு கைகளையும், கரண்டையுட்பட இரு கால்களையும் கழுவிக் கொள்ள வேண்டும். தலையில் ஈரக்கையால் மஸ்கு செய்து கொள்ள வேண்டும். தண்ணீரை பயன்படுத்த முடியவில்லையானால் தயம்மம் செய்து கொள்ள வேண்டும். அதாவது முகத்தையும், இரண்டு கைகளையும், மண்ணினால் தடவிக் கொள்ள வேண்டும். பெருந்தொடக்கிருந்தால் குளித்துக் கொள்ள வேண்டும் என்பன இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விதிகளாகும். இவை சம்மந்தமான இதர உபவிதிகள் மார்க்கச் சட்ட நூற்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ரிவாயத்து:- "ஒருவர் தொழுக நாடி ஒலுச் செய்யச் சென்று இரண்டு கைகளையும் கழுவுவாராயின், அவரது கை செய்த பாவம் அவ்விரண்டு கைகளிலிருந்தும் விழுகிற முதலாவது துளியுடன் நீங்கிவிடும். இனி வாய்கொப்பளித்தால், நா, உதடு ஆகியவைகள் செய்த பாவங்கள் வாயிலிருந்து விழும் முதலாவது துளியுடன் நீங்கிவிடும், இனி முகத்தையும், முழங்கையுட்பட இரு கரங்களையும், கரண்டையுட்பட இரு கால்களையும் கழுவினால், அவர் தனது பாவம் அனைத்தையும் விட்டு நீங்கி அன்று பிறந்த பாலரைப் போலாகி

விடுவார்'' என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَاذْكُرُوا نِعْمَةَ اللَّهِ عَلَيْكُمْ وَمِيثَاقَهُ الَّذِي وَاثَقَكُم
بِهِ إِذْ قُلْتُمْ سَمِعْنَا وَأَطَعْنَا ۖ وَاتَّقُوا اللَّهَ ۚ إِنَّ
اللَّهَ عَلِيمٌ بِذَاتِ الصُّدُورِ ۝

7. இன்னும், உங்கள் மீது(புரிந்து)ள்ள அல்லாஹ்வின் அருட்கொடையையும், ''நாங்கள் செவிமடுத்துக் கொண்டோம். இன்னும் நாங்கள் கீழ்ப்படிந்தோம்'' என்று நீங்கள் கூறிய நேரத்தில் எதனைக் கொண்டு, உங்களிடம் அவன் உறுதி மொழி வாங்கினானோ அத்தகைய அவனது வாக்குறுதியையும் எண்ணிப் பாருங்கள். இன்னும் அல்லாஹ்விற்கு பயபக்தி செலுத்துங்கள். நிச்சயமாக அல்லாஹ் இருதயங்களில் உள்ளதை மிகவும் அறிபவன்.

அறிந்துகொள்:- அல்லாஹுத்தஆலா மூமினானவர்களுக்கு அளித்துள்ள அருட்கொடைகளில், முதலாவது அவர்களை இன்மை என்ற இருளிலிருந்து உண்மை (உஜூது) என்ற பிரகாசத்தின்பால் கொண்டு வந்ததும், நேரான மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தக்கவாறு மிகவும் அழகான கோலத்தில் அதாவது மனித வடிவத்தில் அவர்களைச் சிருஷ்டித்தும், சன்மார்க்கத்தின்பால் அவர்களைச் சேர்த்ததுமாகும்.

مِيثَاقَهُ அவனது வாக்குறுதி என்பதற்கு, அல்லாஹுத் தஆலாவே முஸ்லிம்களிடம் நேரடியாக வாக்குறுதி வாங்கினான் என்பது கருத்தல்ல. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் ஸஹாபிகளிடம் அவர்கள் கஷ்டத்திற்கு உட்படுத்தப் பட்டாலும், மகிழ்ச்சியை யடைந்தாலும், செல்வம் வந்தாலும், தரித்திரம் ஏற்பட்டாலும், எச்சமயத்திலும் தமது கட்டளையைக் கேட்டுக் கீழ்ப்படிய வேண்டும்'' என்பதாக வாக்குறுதி வாங்கினார்கள். இவ்வாக்குறுதியை இறைவன் இங்கு சுட்டிக் காட்டி இருக்கிறான். ஏனெனில், நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது ரசூலாக இருப்பதால், அவர்களிடம் செய்து கொடுக்கும் வாக்குறுதி அல்லாஹுத்தஆலாவிடம் செய்து கொடுக்கும் வாக்குறுதியாகவே இருக்கிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ لِلَّهِ شُهَدَاءَ
بِالْقِسْطِ ۖ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ قَوْمٍ عَلَىٰ أَلَّا تَعْدِلُوا
اعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۖ وَاتَّقُوا اللَّهَ ۚ إِنَّ اللَّهَ
خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ ۝

8. ஈமான் கொண்டவர்களே, அல்லாஹ்வுக்கு நிலை நிற்பவர்களாக (வும்), நீதத்தைக் கொண்டு சாட்சி கூறுபவர்களாக (வும்) இருங்கள். மேலும், ஒரு கூட்டத்தாரின் (மீது உங்களுக்குள்ள) கோபம், நீங்கள் நீதி செலுத்தாதிருக்கும்படி உங்களைச் செய்து விடவேண்டாம். நீங்கள் நீதி செய்யுங்கள். அதுதான் பயபக்திக்கு மிக நெருங்கியது, இன்னும், அல்லாஹ்வுக்குப் பயபக்தியாயிருங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை மிக உணர்பவன்.

شَنَآنُ قَوْمٍ **ஷன்ஆனு கௌமின்** அதாவது ''ஒரு கூட்டத்தாரின் (மீது உங்களுக்குள்ள) கோபம்'' என்றதற்கு முஷ்ரிக்குகள் மீதுள்ள கோபம் என்பது கருத்து. முஷ்ரிக்குகளாக இருந்தாலும்கூட அவர்களிடத்திலும் நீதியாக நடந்து கொள்ள வேண்டும் என்பதும், நீதி செய்வதுதான் தக்வா என்னும் பயபக்திக்கு மிகவும் நெருங்கிய தென்பதும், அல்லாஹுத் தஆலாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவற்றை உறுதியாக நிறைவேற்ற வேண்டும் என்பதும் இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விதிகளாகும்.

அறிந்துகொள்:- கியாமத்து நாளில் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்கு உண்மை என்னும் கொடியும், உமர் ஃபாரூக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு

அவர்களுக்கு நீதி என்னும் கொடியும், உதுமான் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்கு தர்மம் என்னும் கொடியும், அலீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்கு ஷஹாதத்து என்னும் கொடியும் பிடிக்கப்படும். உண்மையுரைத்தோர் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், நீதி செய்தோர் ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், தர்மம் செய்தோர் ஹளரத் உதுமான் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், ஷஹீதானவர் ஹளரத் அலீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், மார்க்கச் சட்டத்தைப் படித்தோர் மஆதுப்னு ஜபல் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், இவ்வுலகைத் துறந்த துறவிகள் அபூதர்ரு ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், ஃபக்கீர்களாகவுள்ளவர்கள் அபூதர்த்தாஉ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், குர்ஆன் ஓதிக் கொடுத்தவர்கள் உபய்யுப்னு கஅப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், பாங்கு சொல்வோர் பிலால் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும், அநியாயமாகக் கொல்லப்பட்டவர்கள் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கொடிக்குக் கீழிலும் இருப்பார்கள் என்று **ஜஹ்ரத்துர் ரியால்** என்னும் கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ ۙ لَهُمْ مَّغْفِرَةٌ وَّاَجْرٌ عَظِيْمٌ ۝

9. ஈமான் கொண்டு, இணக்கமானவை (களான நற்செயல்)களைச் செய்தார்களே அவர்களுக்கு அல்லாஹ் (சுவர்க்கத்தை அளிப்பதாக) வாக்களிக்கிறான். அவர்களுக்கு, பிழைபொறுக்குதலும், மகத்தான (நற்) கூலியும் இருக்கின்றன.

ஈமான் கொண்டு நற்செய்களைச் செய்தவர்களுக்கு அல்லாஹுத்தஆலா கூறிய வாக்குறுதியில் எதைக் கொடுப்பான் என்பதாகக் குறிப்பாக கூறவில்லை. என்றாலும், அவர்களுக்குப் பிழை பொறுக்குதலும், மகத்தான நற்கூலியும் இருக்கின்றன என்று கூறி இருப்பதால், அவர்களுக்கு சுவர்க்கத்தைக் கொடுப்பதாக வாக்களிக்கிறான் என்பது விளங்குகிறது.

وَالَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا بِاٰيٰتِنَاۤ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْجَحِيْمِ ۝

10. இன்னும் காஃபிராகி, நம்முடைய ஆயத்துகளைப் பொய்ப்பித்தார்களே அவர்கள் - அவர்கள், (ஜஹீம் என்னும்) நரகவாதிகள்.

ஆயாத்துனா அதாவது, நம்முடைய ஆயத்துகள் என்பதற்கு இரண்டு விதமான கருத்துகளுண்டு. திருக்குர்ஆனிலுள்ள வசனங்கள் என்பது ஒன்று. அல்லாஹுத்தஆலாவின் ஏகதெய்வத் தன்மையை அறிவிக்கும்படியான அற்புதங்கள் என்பது மற்றொன்று. இவ்விடத்தில் இவ்விருவகை கருத்துக்களையும் கொள்ளலாம். ஆயினும், **தஃப்ஸீர் ரூஹுல் பயான்** போன்ற கிரந்தங்களில் முதலாவது கருத்தைத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நீதி செலுத்த வேண்டும், பயபக்தி கொள்ள வேண்டும் என்று மேலே சொல்லப்பட்ட கட்டளைகளைப் பொய்ப்பித்து, அல்லாஹுத்தஆலாவிற்கு மாறு செய்தவர்கள் நரகவாதிகளாவார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- மூமின்கள் நீதி செலுத்த வேண்டும் என்பதாகவும், அநியாயம் செய்வதைத் தவிர்த்துத் தனக்கு பயபக்தி செலுத்தவேண்டும் என்பதாகவும் இதற்கு முந்திய ஆயத்துகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அநியாயம் செய்வதற்கு மூல காரணமாக உள்ளது கோபமும் ஆத்திரமும்தான். ஆகையால், அவற்றிற்கு

இடங்கொடுக்கலாகாது என்றும் விளக்கப்பட்டிருக்கிறது. எனவே, உண்மையான மூமின் தனது நண்பராயினும், பகைவராயினும் யாவருக்கும் நீதியாகவே நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். முக்கியமாக தனது சொந்த விஷயத்திலும், மனைவி மக்கள் விஷயத்திலும் கூட பாரபட்சம் காட்டக் கூடாது. இதனைக் குறித்துதான், "உங்களில் ஒவ்வொருவரும் மேய்ப்பவர்களாக இருக்கின்றீர்கள். இன்னும் உங்களில் ஒவ்வொருவரும் அவருடைய பிரஜையைப் பற்றி விசாரிக்கப்படுபவரே" என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوا نِعْمَتَ اللَّهِ عَلَيْكُمْ
إِذْ هَمَّ قَوْمٌ أَنْ يَبْسُطُوا إِلَيْكُمْ أَيْدِيَهُمْ فَكَفَّ أَيْدِيَهُمْ
عَنْكُمْ ۖ وَاتَّقُوا اللَّهَ ۚ وَعَلَى اللَّهِ فَلْيَتَوَكَّلِ
الْمُؤْمِنُونَ ۝

11. ஈமான் கொண்டவர்களே, உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் அருட்கொடையை எண்ணிப் பாருங்கள். தங்களுடைய கைகளை உங்கள் மீது நீட்ட (வேண்டுமென்று காஃபிர்களில்) ஒரு கூட்டத்தார் நாடியபோது அவர்களது கைகளை உங்களை விட்டுத் தடுத்துக் கொண்டான். இன்னும், அல்லாஹ்விற்கு நீங்கள் பயபக்தி செலுத்துங்கள். மேலும், அல்லாஹ்வின் மீதே மூமின்கள் (துவக்கல் என்னும்) பொறுப்பு வைக்க வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும் பனூ அன்மார் என்ற கூட்டத்தார் மீது படையெடுத்துச் சென்றார்கள். அது சமயம் லுஹர்த் தொழுகைக்கு நேரம் வந்தது. அனைவரும் தொழுகையை நிறைவேற்றினார்கள், இவர்கள் தொழுது முடிந்தபிறகு பனூ அன்மார் கூட்டத்தாருக்கு கவலை ஏற்பட்டது. அதாவது முஸ்லிம்கள் தொழுது கொண்டிருந்தபோது, அவர்கள் மீது பாய்ந்து, அவர்களை வெட்டாமல் விட்டு விட்டோமே என்று கவலைப்பட்டார்கள். அப்பொழுது அங்கிருந்த ஒருவர் அவர்களை

நோக்கி "இதற்குப் பிறகு ஒரு தொழுகை இருக்கிறது, அந்தத் தொழுகை முஸ்லிம்களுக்கு அவர்களுடைய புதல்வர்களையும் மூதாதையர் களையும் பார்க்கினும் அதிகப்பிரியமானது; அதனை நிறைவேற்றும் போது, நாம் அனைவரும் அவர்கள் மீது ஒரு மூச்சில் பாய்ந்து விழுந்து வெட்ட வேண்டும்" என்று கூறவே, அப்படியே செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர். ஆனால், அஸர்த் தொழுகை வருவதற்குள், பயங்கரமான சமயத்தில் தொழுவதற்குரிய முறைகளைக் குறித்து அதாவது, ஸலாத்துல் கௌஃபுடைய விபரத்தை குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவன் வஹி அறிவித்து விட்டான். இதன்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அஸர்த் தொழுகையை நிறைவேற்றினார்கள். ஆதலால், காஃபிர்கள் எண்ணியிருந்த காரியம் கைகூடுவதற்கு இல்லாமற் போய்விட்டது. இச்சம்பவத்தைக் குறித்துத்தான் இறைவன் "அருட்கொடை" என்பதாகக் கூறியிருக்கிறான் என்பதாகச் சிலர் கூறி இருக்கிறார்கள். இதுபோன்ற இதர சில சம்பவங்களை வேறு சிலர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கையை நீட்டுதல் என்பதற்கு "வெட்டுதல், கொலை செய்தல்" என்பது கருத்து.

அறிந்துகொள்:- அத்தவக்குல் என்பது எல்லாக் காரியங்களிலும் அல்லாஹுத்தஆலாவின் மீது பொறுப்புக் கொடுத்து விட்டு அவனை நம்பி இருப்பதற்குப் பெயர். இது இருதய சம்மந்தமுள்ளது. புறத்தில் மனிதர்கள் பல வேலைகளில் ஈடுபடுவது இந்த நம்பிக்கைக்கு முரண்பட்டதல்ல. இந்த நம்பிக்கையின் கடைசி எல்லையை அடைந்தவர்கள் ஒரு மைய்யித்திற்குச் சமமாகவே இருப்பர். அதாவது இறந்துபோனவரது உயிரற்ற உடலைக் குளிப்பாட்டுபவர்கள் எப்பக்கம் திருப்பினாலும், அது திரும்பிக் கொள்வதுபோல, இந்த நம்பிக்கை பூரணமாக உள்ளவர்கள் அல்லாஹுத்தஆலாவின் செய்கைகளை மிகத்திருப்தியாய் ஏற்றுக் கொண்டு அவற்றிற்கேற்றவாறு தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொள்வர். இதனாற்றான், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம்

அவர்களை நம்ரூது அரசனும், அவனது ஜனங்களும் துன்புறுத்தி, நெருப்புக் குன்றத்தில் எறிந்தபோது, ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முன்தோன்றி "தங்களுக்கு ஏதேனும் தேவை இருக்கிறதா?" என்று வினவியதற்கு "உம்மிடத்தில் எனக்குத்தேவை இல்லை" என்று பதில் கூறிவிட்டார்கள்.

وَلَقَدْ أَخَذَ اللَّهُ مِيثَاقَ بَنِي إِسْرَاءِيلَ ۚ وَبَعَثْنَا
مِنْهُمُ اثْنَيْ عَشَرَ نَقِيبًا ۖ وَقَالَ اللَّهُ إِنِّي مَعَكُمْ ۖ
لَئِنْ أَقَمْتُمُ الصَّلَاةَ وَآتَيْتُمُ الزَّكَاةَ وَآمَنْتُمْ
بِرُسُلِي وَعَزَّرْتُمُوهُمْ وَأَقْرَضْتُمُ اللَّهَ قَرْضًا حَسَنًا
لَأُكَفِّرَنَّ عَنْكُمْ سَيِّئَاتِكُمْ وَلَأُدْخِلَنَّكُمْ جَنَّاتٍ
تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ ۚ فَمَنْ كَفَرَ بَعْدَ ذَٰلِكَ
مِنْكُمْ فَقَدْ ضَلَّ سَوَاءَ السَّبِيلِ ۝

12. மேலும், இஸ்றாயீலின் சந்ததியிடத்தில் உறுதிமொழியை அல்லாஹ் நிச்சயமாக எடுத்தான். (அதாவது) மேலும், அவர்களிலிருந்து பன்னிரண்டு பிணையாளரை (அவர்களின் உறுதிமொழியைக் கண்காணித்து வர) நிலைபடுத்தினோம். இன்னும், நிச்சயமாக நான் உங்களுடன் இருக்கிறேன் என்று அல்லாஹ் கூறினான். தொழுகையை நீங்கள் நிலை நிறுத்தி, ஜக்காத்தை நீங்கள் கொடுத்து, எனது தூதர் (ரசூல்) களுக்கு நீங்கள் ஈமான் கொண்டு, அவர்களுக்கு நீங்கள் உதவி செய்து, அல்லாஹ்விற்கு அழகான கடனைக் கடன் கொடுத்தீர்களாயின், உங்களுடைய தீமைகளை உங்களை விட்டு நான் நிச்சயமாக மறைப்பேன். இன்னும் (சுவர்க்கத்துச்) சோலைகளில் அவற்றிற்குக் கீழில் அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. உங்களை நான் நிச்சயமாக புகச் செய்வேன். ஆகவே, இதற்குப் பின்னும், உங்களிலிருந்து எவர் காஃபிராகி விடுகிறாரோ நேரான பாதையை விட்டு திட்டமாக அவர் தவறிவிட்டார் (என்றும் கூறினான்).

ரிவாயத்து:- ஃபிர்அவ்ன் அழிந்துபோன பிறகும் இஸ்ராயீலின் சந்ததியினர் எகிப்து தேசத்தில்தான் இருந்து கொண்டிருந்தனர். அப்பொழுது, அவர்கள் அந்நாட்டை விட்டு ஷாம் தேசத்திலுள்ள அரீஹா என்ற பிரதேசத்திற்குச் செல்லும்படி இறைவன் கட்டளை யிட்டான். இத்தேசத்தில் கானானியர் குடி இருந்து கொண்டிருந்தனர். இதில் ஆயிரம் கிராமங்களிருந்தன, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஆயிரம் தோட்டங்களிருந்தன. ஆகவே, இந்த நாட்டை உங்களது தாய் நாடாக நான் ஏற்படுத்தி இருக்கிறேன். நீங்கள் அங்கு சென்று அதில் வசித்துக் கொண்டிருப்பவர்களிடம் போர் செய்யுங்கள். உங்களுக்கு நான் உதவியாக இருக்கிறேன் என்று இறைவன் கூறியதுடன், பனீ இஸ்ராயீலுள்ள பன்னிரண்டு வர்க்கத்தாரிலும், பன்னிரண்டு தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படியும், இப்பன்னிருவரும் தங்கள் வர்க்கத்தார் இறைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிவார்கள் என்பதற்குப் பொறுப்பாளர்களாக இருக்க வேண்டும் என்றும் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

எனவே, இந்நாட்டிற்குப் பக்கத்தில் வந்தவுடன் அந்நாட்டிற்குள் சென்று வேவு பார்த்து வரும்படி ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இப்பன்னிரண்டு பேருக்கும் கட்டளை யிட்டனுப்பினார்கள். அவர்கள் அங்கு சென்று அங்குள்ளவர்களது உயரம், தடிப்பம், பலம் முதலியவற்றைக் கண்டு பயந்து திரும்ப வந்து, தங்கள் கண்ட பயங்கரமான காட்சிகளைத் தங்களது ஜனங்களிடம் கூறினர். ஆனால், இவர்கள் அவ்வாறு சொல்லக் கூடாது என்று ஏற்கனவே ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கட்டளை யிட்டிருந்தார்கள். இக்கட்டளைக்கு, அவர்களில் யஹூதாவின் வம்சத்தினரின் பிரதிநிதியான காலபுப்னு யூஹன்னா என்பவரும், ஹளரத் யூசுஃப்பு அலைஹிஸ்ஸலாம் அவர்களது புதல்வரான

அப்ராயீம் என்பவரது வம்சத்தினரின் பிரதிநிதியான யூஷஉப்னு நூன் என்பவரும்தான் தங்கள் இனத்தாரிடம் தாங்கள் கண்டதைக் கூறவில்லை.

தவிரவும், இப்பன்னிரு தலைவர்களும் வேவுபார்ப்பதற்காக அப்பிரதேசத்திற்குட் சென்றபோது, ஊஜுப்னு உனூக் என்பவனைச் சந்தித்தனர் என்று கூறப்படுகிறது. இவன் மூவாயிரத்து முன்னூற்று முப்பத்து மூன்று முழம் எட்டு இஞ்சி உயரமுள்ளவன். இவன் மூவாயிரம் வருடம் உயிருடனிருந்தான். இவன் மேக மண்டலத்திற்கும் உயரமாக இருந்ததால், மேகங்களிலிருந்தே தண்ணீரை எடுத்துப் பருகிக் கொள்வானாம். கடலில் ஆழமான இடங்களில் வசிக்கும் மீன்களைப் பிடித்து வானத்தில் உயர்த்தி சூரியனின் வெப்பத்தால் அதனைச் சுட்டுப் புசிப்பானாம், ஹளரத் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் மலைகளுக்குச் சரியாக உயர்ந்து வந்தது. அவ்வாறிருந்தும், அவ்வெள்ளம் இவனுக்குக் கரண்டைக்கால் அளவிற்குத்தான் இருந்ததாம். இவனுடைய தாயாகிய உனுக் என்பவள் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது புதல்விகளில் ஒருத்தியாம். இவ்வித பிரமாண்டமான உடலையுடைய ஊஜ் மலையிலிருந்து விறகு எடுத்துத் தலையில் சுமந்துவரும் போது, இப்பன்னிருவரையும் கண்டு, இவர்களைப் பிடித்துத் தனது விறகுகளுக்குமேலில் வைத்துக் கொண்டு தனது மனைவியிடம் கொண்டு வந்து "இதோ இவர்களைப் பார், இவர்கள் நம்முடன் யுத்தம் செய்யப் போகிறார்களாம் என்று கூறி, இவர்களை அவளுக்கு முன்னிலேயே எறிந்து, இவர்களை எனது காலால் நசுக்கிக் கொன்று விடட்டுமா?" என்று கூறினான். அதற்கவள், "வேண்டாம், தங்கள் இனத்தாரிடம் அவர்கள் சென்று தாங்கள் கண்டவற்றைக் கூறட்டும்; விட்டு விடுங்கள்" என்று கூறினாள். அதன் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்பதாக ஒரு ரிவாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மற்றொரு ரிவாயத்தில் "அப்பன்னிருவரையும் அவன் தனது சட்டைக் கையினுள் வைத்துத் தனது அரசனிடம் கொண்டு சென்று உதிர்த்து விட்டான். அவர்கள் சட்டைக் கையினுள்ளிருந்து தரையில்

விழுந்தனர். அவர்களை அவ்வரசன் விடுதலை செய்து, நீங்கள் திரும்பச் சென்று உங்கள் வர்க்கத்தாரிடம் நீங்கள் கண்டதைக் கூறுங்கள் என்று அனுப்பி விட்டான்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அங்குள்ள தோட்டங்களில் விளையும் திராட்சைக் குலை ஒவ்வொன்றும் நாலைந்து பேர் சுமக்கத்தக்கவாறு அவ்வளவு பெரிதாக இருந்ததாம். அங்கு விளையும் மாதுளம் பழத்தில். விதைகளை எடுத்த பிறகு இருக்கிற தோட்டுக்குள் ஐந்துபேர் நுழைந்து கொள்ள முடியுமாம். இவ்விசேஷங்களை எல்லாம் பார்த்த இப்பன்னிருவரும் இச்செய்தியை மூஸா அலைஹிஸ்ஸலாம் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவருக்கு மட்டும்தான் கூறவேண்டும். மற்றைய ஜனங்களிடம் கூறினால், அவர்கள் பயந்து அல்லாஹ்வின் திருநபிக்குக் கீழ்ப்படியாமல் மாறிவிடுவார்கள் என்று கூறி ஒருவருக்கொருவர் சத்தியம் செய்து கொண்டு திரும்ப வந்தனர். வழியில் ஒரு திராட்சைக்குலையைப் பறித்து ஒரு ஒட்டகையின் மீதேற்றிக் கொண்டு வந்து சேர்ந்தனர். ஆயினும், இவர்களில் மேற்கண்ட இருவரைத் தவிர, மற்றைய பத்துப்பேரும் தங்களது உடன்படிக்கையை மீறித் தாங்கள் கண்டவைகளைத் தங்கள் சமூகத்தாரிடம் கூறி, யுத்தத்திற்குச் செல்ல வேண்டாம் என்றும் அவர்களைத் தடுத்து விட்டனர்.

பின்னர், ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம்மிடம் எஞ்சியுள்ள போர் வீரர்களை, அழைத்துக் கொண்டு கானானியரிடம் யுத்தத்திற்குச் சென்றார்கள். இவர்களது அணிவகுப்பு ஒருகாத நீளமும், ஒருகாத அகலமும் (கூப்பிடும் தூரம்) இருந்தது. இவர்கள் யுத்தத்திற்கு வந்திருப்பதை ஊஜுப்னு உனுக் அறிந்து மலைக்குச் சென்று அணி வகுப்பின் நீள அகலத்திற்குத் தக்கவாறு ஒரு பாறையைத் தலைமீது சுமந்து கொண்டு, அவர்கள் மீது போட்டு, அவர்கள் அனைவரையும் ஒரே முறையில் நசுக்கிவிட வந்தான். ஆனால், அல்லாஹுத்தஆலாவின் நாட்டம் வேறு விதமாக இருந்தது. இறைவன் ஒரு கல்கொத்திக் குருவியை அனுப்பி, அவன் தலைக்கு நேரில் உள்ள கல்லைக் குடைந்து விடும்படி செய்தான். ஆகவே, அவன் சுமந்து வந்த கல் அவனது கழுத்தில் விழுந்து, நன்றாக மாட்டிக் கொண்டது. அதனை அப்புறப்படுத்த முடியாமல் அவன் கீழே

விழுந்தான். இதனைப் பார்த்ததும் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஓடிவந்து, பத்து முழ உயரத்திற்குக் குதித்து, அவனைத் தமது அஸாவினால் அடித்தார்கள். அந்த அடி அவனது கரண்டையில்பட்டு அவன் மரணித்தான். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பத்து முழ உயரமிருந்தார்கள். அவர்களது அஸா பத்து முழ நீளமிருந்தது.

மற்றொரு ரிவாயத்தில் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஒரு கூட்டம் வந்து, அவனது தலையைக் கொய்தது என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது உம்மத்தில் அல்லாஹுத்தஆலா பன்னிரண்டு பொறுப்பாளர் (நுகபாக்)களை ஏற்படுத்தி, அந்த உம்மத்தின் காரியங்களைக் கவனிக்கச் செய்ததுபோல, நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்திலும் நுஜபாக்கள், புதலாக்கள் என்று நாற்பது பேர் எக்காலத்திலும் இருந்து கொண்டே இருக்கிறார்கள். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "இந்த உம்மத்தில் நாற்பது பேர் இப்ராஹீமுடைய தன்மையிலும், ஏழு பேர் ஈஸாவின் தன்மையிலும், ஒருவர் எனது தன்மையிலும் இருப்பார்கள்" என்று கூறி இருக்கிறார்கள். இவர்கள் தங்களது அந்தஸ்திற்குத் தக்கவாறு இந்த உம்மத்திற்குப் பொறுப்பாளிகளாக இருந்து வருகிறார்கள். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இவர்கள் பொருட்டால்தான் நீங்கள் உணவளிக்கப்படுகிறீர்கள், இவர்கள் பொருட்டால்தான் உங்களுக்கு மழை பொழிகிறது, இவர்கள் பொருட்டால்தான் அல்லாஹுத்தஆலா கஷ்டங்களை உங்களை விட்டு அகற்றுகிறான்" என்று கூறி இருக்கிறார்கள்.

"புதலாக்கள் நாற்பது பேர், உமனாக்கள் ஏழு பேர், குலஃபாக்களான இமாம்கள் மூன்று பேர், ஒருவர் குத்துபு. இவர் எல்லா ஒலிமார்களையும், நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார். இவரை ஒருவரும் அறிந்து கொள்ள முடியாது. இவர்தான குலஃபாக்களான

இமாம்கள் மூவருக்கும் தலைவர். குலஃபாக்களான மூவரும் தங்களுக்கு அடுத்தபடியிலுள்ள உமனாக்கள் எழுவரையும் அறிந்திருப்பார்கள். இவ்வெழுவரும் இம்மூவரையும் தெரிந்து கொள்ள முடியாது. இவ்வெழுவரும் தங்களுக்கு அடுத்தபடியிலுள்ள புதலாக்கள் நாற்பது பேரையும் தெரிந்து இருப்பார்கள். ஆனால், இந்நாற்பது பேரும் அவ்வெழுவரைத் தெரிந்து கொள்ள மாட்டார்கள். இந்நாற்பது பேரும் தங்களுக்குக் கீழிலுள்ள ஏனைய ஒலிமார்களைத் தெரிந்திருப்பார்கள். அவ்வொலிமார்கள் இந்நாற்பது பேரைத் தெரிந்து கொள்ள மாட்டார்கள், இந்நாற்பது பேரில் ஒருவர் குறைந்தால் ஒலிமார்களில் ஒருவர் அந்த ஸ்தானத்திற்கு வருவார். உமனாக்களாகிய எழுவில் ஒருவர் குறைந்தால், இந்நாற்பது பேரில் ஒருவர் அந்த ஸ்தானத்திற்கு வருவார். குலஃபாக்களாகிய மூவரில் ஒருவர் குறைந்தால், அவ்வெழு உமனாக்களில் ஒருவர் அந்த ஸ்தானத்திற்கு வருவார். உமனாக்களாகிய எழுவரில் ஒருவர் குறைந்தால், இந்நாற்பது பேரில் ஒருவர் அந்த ஸ்தானத்திற்கு வருவார். குலஃபாக்களாகிய மூவரில் ஒருவர் குறைந்தால், அவ்வெழு உமனாக்களில் ஒருவர் அந்த ஸ்தானத்திற்கு வருவார். குத்துபாக இருக்கிற ஒருவர் இவ்வுலகை விட்டு மறைந்தால் அவரது ஸ்தானத்தில் குலபாக்களாகிய மூவரில் ஒருவர் வருவார். இவ்விதமாக கியாமத்து நாள்வரை ஒலிமார்கள் இருந்து வருவார்கள்" என்பதாக அபூஉதுமானில் மகுரிப்யி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருப்பதாக **தாவீலாத்துன்னஜ்மிய்யா** என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

فَبِمَا نَقْضِهِمْ مِّيْثَاقَهُمْ لَعَنّٰهُمْ وَجَعَلْنَا قُلُوْبَهُمْ
قٰسِيَةً ۚ يُحَرِّفُوْنَ الْكَلِمَ عَنْ مَّوَاضِعِهٖ ۙ وَنَسُوْا
حَظًّا مِّمَّا ذُكِّرُوْا بِهٖ ۚ وَلَا تَزَالُ تَطَّلِعُ عَلٰى خَآئِنَةٍ
مِّنْهُمْ اِلَّا قَلِيْلًا مِّنْهُمْ فَاعْفُ عَنْهُمْ وَاصْفَحْ ۚ اِنَّ

اللهَ يُحِبُّ الْمُحْسِنِيْنَ۝

13. ஆகவே, (யூதர்களாகிய அவர்கள்) தங்களுடைய உறுதிமொழியை அவர்கள் முறித்ததால், அவர்களை நாம் சபித்து விட்டோம், இன்னும், அவர்களுடைய இருதயங்களை கடினமானவைகளாக ஆக்கிவிட்டோம். வேத வசனங்களை அதனுடைய இடத்தை விட்டும் அவர்கள் மாற்றி விடுகிறார்கள். இன்னும், அவர்களுக்கு உபதேசிக்கப்பட்டதிலிருந்து ஒரு (பலன்தரும் பெரும்) பாக்கியத்தை அவர்கள் மறந்து விட்டார்கள். மேலும், (நபியே யூதர்களாகிய) அவர்களிலிருந்து சதியை நீர் (சதா) அறிந்து கொண்டே இருப்பீர். ஆனால், அவர்களிற் சிலரைத் தவிர. ஆகவே, அவர்களை மன்னித்து, புறக்கணித்து விடுவீராக. நிச்சயமாக அல்லாஹ் உதவி செய்பவர்களை நேசிக்கிறான்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பிறகு வந்த நபிமார்களை யூதர்கள் அங்கீகரித்து, அவர்களுக்குக் கீழ்ப்படியவில்லை. பல நபிமார்களை அவர்கள் கொலை செய்தனர். வேதத்தில் சொல்லப்பட்டவைகளை மதிக்கவில்லை. இவற்றைக் குறித்துத்தான் இந்த ஆயத்தில் "தங்களுடைய வாக்குறுதியை அவர்கள் முறித்தார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

لَعَنّٰهُمْ லஅன்னாஹும் "சபித்தோம்" என்பதற்கு அவர்களைத் துரத்திவிட்டோம். நம்முடைய கிருபையை விட்டு அவர்களைத் தூரப்படுத்திவிட்டோம். அவர்களைக் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றினோம். மற்றவர்களுக்குக் கீழ்ப்படிந்து ஜிஸ்யாவரி கொடுக்கும் நிலைக்கு அவர்களை வீழ்ச்சியுறச் செய்தோம் என்பன போன்றவைகள் கருத்தாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய காலத்திலிருந்த யூதர்களிற் சிலரைத் தவிர, மற்றவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அங்கீகரித்து ஈமான் கொள்ளவில்லை. ஆதலால், இவர்களும் தங்களது வாக்குறுதியை

மீறி, இறைவனின் கோபத்திற்காளானவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் ஏதேனும் ஒரு வகையில் சதி செய்து கொண்டே இருப்பார்கள். அதனை நீர் அறிந்து கொள்வீர். என்றாலும், அவர்களை நீர் மன்னிக்க வேண்டும், அவர்கள் தவ்பாச் செய்து மீண்டு, ஈமான் கொண்டு விட்டால் அல்லது உடன்படிக்கை செய்து கொண்டு, ஜிஸ்யாவரி கொடுத்தால், அப்புறம் அவர்களுக்குத் தண்டனை கொடுக்காமல் அவர்களது குற்றங்களை மன்னித்துக் கொள்ள வேண்டும் என்பதாக இந்த ஆயத்தில் கட்டளையிடப் பட்டிருக்கிறது.

அறிந்து கொள்:- சதி செய்கிற காஃபிர்களை மன்னித்து விடுவதை இறைவன் இந்த ஆயத்தில் உதவி என்பதாகக் கூறி இருக்கும் போது, மூமின்களை மன்னிப்பது இன்னும் அதிகமான நன்மையாகும் என்பது தானாகவே விளங்குகிறது.

இந்த ஆயத்திற் சொல்லப்பட்டுள்ள கட்டளை.

அல்லாஹ்வையும் கடைசி நாளையும் ஈமான் கொள்ளாதவர் களுடன் யுத்தம் செய்யுங்கள் என்ற ஸூரத்துத் தவ்பா 29 வது ஆயத்தின் மூலமாக மாற்றப் பட்டிருக்கிறது.

وَمِنَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّا نَصٰرٰٓى اَخَذْنَا مِيْثَاقَهُمْ فَنَسُوْا حَظًّا مِّمَّا ذُكِّرُوْا بِهٖ ۖ فَاَغْرَيْنَا بَيْنَهُمُ الْعَدَاوَةَ وَالْبَغْضَآءَ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ ۗ وَسَوْفَ يُنَبِّئُهُمُ اللّٰهُ بِمَا كَانُوْا يَصْنَعُوْنَ۝

14. மேலும், நிச்சயமாக நாங்கள் கிறிஸ்துவர்களாக இருக்கிறோம் என்று கூறினார்களே அவர்களிலிருந்து அவர்களுடைய உறுதிமொழியை நாம் வாங்கினோம். அப்பால், அவர்கள் உபதேசிக்கப்பட்டதிலிருந்து ஒரு (பெரும்) பாகத்தை அவர்கள் மறந்து விட்டார்கள். ஆகவே, கியாமத்து நாள் வரை,

அவர்களுக்கிடையில் பகையையும், கோபத்தையும் போட்டு விட்டோம். மேலும், அவர்கள் செய்து கொண்டிருந்ததைக் குறித்து அவர்களுக்கு அல்லாஹ் விரைவில் அறிவிப்பான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து ஈமான் கொள்ள வேண்டும் என்று இஞ்ஜீல் வேதத்தில் கட்டளையிட்டிருப்பதையும், அதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வர்ணனைகளைக் கூறி இருப்பதையும்தான் இவ்வசனத்தில் "நாம் வாக்குறுதி வாங்கினோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நஸாரா என்று கிறிஸ்துவர்களுக்குச் சொல்லப்படும் பெயர் முஸ்லிம்களால் வைக்கப்பட்டதல்ல, கிறிஸ்துவர் களாலேயே வைக்கப்பட்டது என்பதை அறிவிப்பதற்காகத்தான் "நிச்சயமாக நாங்கள் கிறிஸ்துவர்கள் என்று கூறினார்களே அவர்களிலிருந்து" என்று இவ்வசனத்தில் கிறிஸ்துவர்களைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது.

العداوة **அல்அதாவத்து** என்பதற்கு மனம் ஒன்றுபடாமல் பிரிந்திருப்பது என்பது கருத்து. இந்த ஆயத்தில் சொல்லப்பட்டபடி கிருஸ்துவ சமூகத்தில் பற்பல பிரிவுகள் தோன்றி, கொள்கையில் அபிப்பிராய பேதங் கொண்டது மல்லாமல் மனவேற்றுமையும், கோபமும் உள்ளவர்களாக ஆகிவிட்டனர். ஆகவே, அவர்கள் மத விஷயத்தில் ஒற்றுமையாகி ஐக்கியப்படுவதற்கு இடமில்லை.

அவர்களுக்குள் இவ்வேற்றுமையையும், கட்சிப் பிளவையும் ஏற்படுத்தியவர் பவுல் என்பவர். இவருக்கு கிறிஸ்துவர்கள் மீது மிகத்துவேஷமிருந்தது. அவர்களை இவ்வுலகில் இல்லாமல் ஒழித்துவிட வேண்டுமென்ற கருத்தில், அவர்களில் பலரைக் கொலை செய்வித்தார். பின்னர், கிறிஸ்துவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு மடிவதற்கான ஒரு யுக்தியைச் செய்து, தன்னுடைய கண்களில் ஒன்றைப் பொட்டையாக்கிக் கொண்டு அவர்களிடம் சென்று "என்னை நீங்கள் அறிவீர்களா?" என்று வினவினார். அதற்கு கிறிஸ்துவர்கள் "ஆம், உம்மை நாங்கள் அறிவோம். நீர்தான் எங்களிலிருந்த பலரைக் கொலை செய்வித்தவர், இன்னின்ன

விதமான காரியங்களை எல்லாம் செய்தவர்" என்று கூறினார்கள். அப்பொழுது அவர் "நீங்கள் கூறுவது உண்மைதான். ஆனாலும், இன்று நான் தவ்பாச் செய்துவிட்டேன். நான் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கனவில் கண்டேன். அவர் வானத்திலிருந்து இறங்கி வந்து என் முகத்தில் பலமாக அறைந்து என் கண்ணையும் குத்தி, "என் சமூகத்தாரிடமிருந்து நீர் செய்விக்க விரும்பும் காரியமென்ன? அவர்களை நீர் ஏன் இப்படிச் செய்தீர்?" என்று கூறினார். நான் அவர் கையைப் பிடித்து தவ்பாச் செய்துவிட்டேன். ஆகவே, அவர் எனக்குக் கற்றுக் கொடுத்த விஷயங்களை உங்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக, நான் உங்களிடம் வந்திருக்கிறேன்" என்று கூறி தனது கண் பொட்டையாக இருப்பதையும் காண்பித்தார்.

இதன் காரணமாக, கிறிஸ்துவர்கள் அவர் கூறியதை உண்மையென்று நம்பி, அவருக்காக ஒரு மாளிகையைக் கட்டி, அதன் சுவரில் ஒரு ஜன்னலையும் உண்டாக்கினார்கள். அந்த மாளிகைக்குள் அவர் தனித்திருந்து வணக்கம் புரிந்து கொண்டிருந்தார். சில சமயங்களில் அவரிடம் ஜனங்கள் சென்று, ஜன்னலுக்கு நேராக வெளியில் ஒன்று கூடுவர், மத சம்பந்தமாகத் தங்களுக்குத் தெரியாதவைகளைப்பற்றி அவரிடம் வினவுவர். அவர்களுக்குத் தக்க விடைகள் அளிப்பார். சில சமயங்களில் அவரே அந்த ஜனங்களை வரும்படி அழைத்து, ஒன்று கூட்டி, மார்க்க உபதேசம் செய்வார். அதன் மத்தியில் அவர்கள் மார்க்கத்திற்கு ஆகாத சில காரியங்களைச் செய்யும்படியும் கூறுவார். இதனை எவரேனும் எதிர்த்தால் அதற்குத் தக்க சமாதானம் கூறி, அவர்கள் எல்லோரையும் அங்கீகரிக்கும்படி தமது வாக்கு சாதுர்யத்தால் மடக்கி விடுவார்.

ஒரு நாள் அவர் கிறிஸ்துவர்களைப் பார்த்து, தனக்கு ஒரு காரியம் வெளியாகி இருப்பதாகவும், அதனைக் கூறுவதற்கு எல்லாரும் தன்னிடம் வரவேண்டுமென்றும் கூறினார். அங்கிருந்த யாவரும் வந்தபோது அவர்களை நோக்கி "மனிதரது உபயோகத்திற்காக அல்லவா எல்லா பொருட்களையும் இறைவன் சிருஷ்டித்திருக்கிறான்?" என்று வினவினார். அதற்கு ஜனங்கள் "ஆம் உண்மைதான்"

என்றார்கள். அப்பொழுது அவர் "பூமியிலுள்ள யாவும் உங்களுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் போது, நீங்கள் ஏன் மதுபானம் அருந்தாமலும், பன்றியின் மாமிசத்தைப் புசிக்காமலும் இருக்க வேண்டும்? இனிமேல் நீங்கள் அப்படிச் செய்ய வேண்டாம்" என்று கூறினார். அதனை அவர்கள் உண்மையென்று நம்பி, மதுபானம் அருந்தவும், பன்றியின் மாமிசத்தைப் புசிக்கவும் தொடங்கினர்.

பிறகு, சில நாட் செல்லவே அவர் மீண்டும் அந்த ஜனங்களை அழைத்து "எனக்குப் புதிதாக ஒரு அறிவு எட்டி இருக்கிறது. அதனை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று கூறி அவர்களை ஒன்று கூட்டினார். அவர்களெல்லோரும் ஒன்று கூடிய பின், அவர்களை நோக்கி "சூரியன் எந்தத் திசையில் உதயமாகின்றான்?" என வினவினார். கிழக்குத் திசையில் என்று பதிற் கூறினர். பிறகு, சந்திரனும் நட்சத்திரங்களும் எத்திசையில் உதயமாகின்றன என்று வினவினார். "கிழக்குத் திசையில்" என்று பதிற் கூறினர். உடனே, அவர்களை நோக்கி அவர் அல்லாஹுத்தஆலாவும் கிழக்குத் திசையிலிருக்கிறான் என்பதை இதிலிருந்து உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் தொழுகையை நிறைவேற்றும்போது அவனை நோக்கியே தொழவேண்டும்" என்று கூறி, அவர்களது கிப்லாவை விட்டு அவர்களை, கிழக்குத் திசையை நோக்கித் தொழும்படி திருப்பி விட்டார்.

இதுபோல இன்னும் சில நாட்சென்ற பின்னர், அவர்களில் ஒரு கூட்டத்தினரை அழைத்து. தனது அறையின் வாசல் வழியாகத் தன்னிடம் வரும்படி அழைத்து "என்னை இன்றிரவில் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பலியாக்கிவிட விரும்புகிறேன். எனக்குச் சில ஞானங்கள் தோன்றி இருக்கின்றன. அவற்றை உங்களுக்கு இரகசியமாகக் கூற விரும்புகிறேன். எனது உலக வாழ்க்கைக்குப் பிறகு நீங்கள் அவற்றை ஜனங்களிடம் கூறிப் பிரசாரம் செய்ய வேண்டும்" என்று கூறி, அவர்களைத் தன் அருகில் அழைத்து சில செய்திகளைக் கூறினார். இவ்விதமாக கிறிஸ்துவர்களிற் பலரையும் தனித்தனியே அழைத்து, முரண்பாடான விஷயங்களைக் கூறி,

அவர்கள் ஒவ்வொருவரையும் தனது கலீஃபாவாகவும் ஏற்படுத்தி விட்டார்.

தனது கண்களில் ஒன்றை மூடிக்கொண்டு, அது பொட்டையாகி விட்டதாகக் கூறி, அவர்களிடம் செல்வாக்குப் பெற்ற அவர், ஒரு நாட் காலையில் அந்தக் கண்ணையும் திறந்து கொண்டு, கிறிஸ்துவர்களை அழைத்து, "இன்றிரவு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்னிடம் வந்து, என் பால் அதிக சந்தோஷமடைந்திருப்பதாகக் கூறித் தமது கையால் என் கண்ணைத் தடவினார். அது குணமடைந்து விட்டது" என்று தனது கண்ணை அவர்களிடம் காண்பித்ததுடன், இனி நான் என்னை ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்போகிறேன். மரணித்தவர்களை உயிர்ப்பிக்கவும், பிறவிக்குருடரையும், வெண்குஷ்டரோகியையும், குணப்படுத்தவும் அல்லாஹுத்தஆலாவைத் தவிர வேறு யாராலும் முடியாதல்லவா? இவ்வேலைகளை ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்து வந்ததால், அவர்தான் அல்லாஹுத்தஆலா என்பதையும், அவர் மனித ரூபத்தில் தோன்றினார் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள் என்ற உபதேசித்து அனுப்பினார். பிறகு அவர்களிலுள்ள வேறு ஒரு கூட்டத்தினரை அழைத்து இதுபோலவே தனது கண்ணைக் காண்பித்து, "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹுத்தஆலாவின் புதல்வர்" என்று கூறி அனுப்பிவிட்டார். மற்றொரு கூட்டத்தினரை அழைத்து, தமது கண்ணைக் காண்பித்து "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூன்று தெய்வங்களில் மூன்றாமவர்" என்று கூறி அனுப்பிவிட்டு, அன்றிரவில் ஒருவருக்கும் தெரியாமல் அவ்வறையை விட்டு நழுவி மறைந்து விட்டார். மறு நாட்காலையில் கிறிஸ்துவர் வந்து பார்த்தபோது, அவரைக் காணாததால், அவர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்காகத் தன்னை ஒப்புக் கொடுக்கப் போவதாகக் கூறியதற்கிணங்க, அவர் பலியாகி விட்டார் என்று எண்ணிக் கொண்டனர். பிறகு, அவரது உத்தேசப்படி அவரது கலீஃபாக்கள் தங்களுக்குக் கிடைத்த உபதேசத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்தனர். இவர்களது பிரசாரம் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்ததால்,

இவர்களுக்குள் கட்சிப்பிளவு உண்டாகி பெருங்கலகங்கள் தோன்றின. இதனால், ஏராளமான உயிர்ச் சேதமும் ஏற்பட்டு, இவர்களுக்கிடையில் பெரும் விரோதம் தோன்றிற்று. இவர்களிற் பிரதானமாக மூன்று பிரிவினர் ஏற்பட்டனர். நஸ்தூரியர் என்பவர்கள் ஒரு பிரிவினர். இவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹுத்தஆலாவின் புதல்வர் என்று கருதுகிறார்கள். மல்கானியர் என்பது மற்றொரு பிரிவினர். இவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை மூன்று தெய்வங்களில் மூன்றாமவர் என்று கருதுகிறார்கள். மூன்றாவது பிரிவினர் யாக்கூபியர். இவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் அல்லாஹுத் தஆலா என்று கருதுகிறார்கள் (நஊது பில்லாஹி மின்ஹா).

يَٰٓأَهۡلَ ٱلۡكِتَٰبِ قَدۡ جَآءَكُمۡ رَسُولُنَا يُبَيِّنُ لَكُمۡ كَثِيرٗا
مِّمَّا كُنتُمۡ تُخۡفُونَ مِنَ ٱلۡكِتَٰبِ وَيَعۡفُواْ عَن كَثِيرٖۚ
قَدۡ جَآءَكُم مِّنَ ٱللَّهِ نُورٞ وَكِتَٰبٞ مُّبِينٞ ١٥

15. வேதக்காரர்களே! வேதத்திலிருந்து நீங்கள் மறைத்துக் கொண்டிருந்தீர்களே, அவற்றில் பெரும்பாலானதை உங்களுக்கு வெளிப்படுத்துகிறவராக நமது தூதர் (ரசூல்) உங்களிடம் வந்திருக்கிறார். இன்னும் பெரும்பாலானதை அவர் மன்னித்து (வெளியிடாமல்) விட்டு விடுகிறார். அல்லாஹ்விடமிருந்து உங்களுக்குப் பிரகாசமும் பகிரங்கமான வேதமும் நிச்சயமாக வந்திருக்கின்றன.

أَهۡلَ ٱلۡكِتَٰبِ **அஹ்லுல் கித்தாப்** அதாவது வேதத்தை உடையவர்கள் என்பது இந்த ஆயத்தில் யூதர் கிறிஸ்துவர் ஆகிய இரு வகையினரையும் குறிக்கிறது.

தவ்ராத் வேதத்தில் சொல்லப்பட்டிருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வர்ணனைகள், கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டிய தண்டனைக்குரிய விதி முதலியவைகள்,

தமக்குப் பிறகு அஹ்மது என்பவர் வருவார் என்று இஞ்ஜீல் வேதத்தில் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்தது முதலிய பல முக்கியமான காரியங்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளியிட்டார்கள். இவற்றைத் தவிர வேதக்காரர்கள் மறைத்த வைத்திருந்த வேறு பல விஷயங்கள் மார்க்கக் கொள்கையில் இடைஞ்சலை உண்டாக்காதிருந்ததால், அவற்றைப் பற்றிக் கூறாமலும் இருந்தார்கள். இவ்விரு காரியங்களையும் குறித்துத்தான் **“வேதத்திலிருந்து நீங்கள் மறைத்துக் கொண்டிருந்தீர்களே அதிலிருந்து பெரும்பாலானதை உங்களுக்கு வெளியிடுகிறவர். இன்னும் மிகுதத்தை மன்னிப்பவர்”** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நூர் அதாவது பிரகாசம் என்பதும், **கித்தாப்** அதாவது வேதம் என்பதும் திருக்குர்ஆனையே குறிக்கின்றன. தவிரவும், பிரகாசம் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், வேதம் என்பது திருக்குர்ஆனையும் குறிப்பிடுவதாகவும் சிலர் கூறி இருக்கிறார்கள்.

يَهۡدِي بِهِ ٱللَّهُ مَنِ ٱتَّبَعَ رِضۡوَٰنَهُۥ سُبُلَ
ٱلسَّلَٰمِ وَيُخۡرِجُهُم مِّنَ ٱلظُّلُمَٰتِ إِلَى ٱلنُّورِ
بِإِذۡنِهِۦ وَيَهۡدِيهِمۡ إِلَىٰ صِرَٰطٖ مُّسۡتَقِيمٖ ١٦

16. தன்னுடைய திருப்தியைப் பின்பற்றியவர்களுக்கு அதனைக் கொண்டு அல்லாஹ் ஈடேற்றத்தின் பாதைகளில் தனது நாட்டத்தைக் கொண்டு சேர்ப்பான். இன்னும் இருள்களிலிருந்து பிரகாசத்தின்பால் அவர்களை வெளிப்படுத்துவான். இன்னும், அவர்களை நேரான மார்க்கத்தின்பால் வழிகாட்டுவான்.

مَنِ ٱتَّبَعَ رِضۡوَٰنَهُۥ **அவனது திருப்தியைப் பின்பற்றியவர்கள்** என்பதற்கு அவனை ஈமான் கொண்டவர்கள் என்பது கருத்து. ஏனெனில் ஈமான் கொண்டவர்கள் மீதுதான் அவனுக்குத் திருப்தி யேற்படுகிறது.

وَيُخْرِجُهُم مِّنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ **இன்னும் அவர்களை இருள்களிலிருந்து பிரகாசத்தின்பால் வெளிப்படுத்துகிறான்** என்பதற்கு குஃப்ரு, வழிகேடு முதலிய இருள்களிலிருந்து, ஈமான் என்ற பிரகாசத்தின்பால் கொண்டு செல்கிறான் என்பது கருத்து. ஏனெனில், மனிதன் ஈமான் கொண்டு விடுவானாயின் தனது முக்திக்குரிய மார்க்கம் எது? அதனை அடைவது எப்படி? இன்னும் தன்னை அழிவுறச் செய்யும் மார்க்கம் எது? அதனைத் தவிர்த்துக் கொள்வது எப்படி? என்பதைப் பார்த்துக் கொள்கிறான் என்பதாலென்க.

لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ
ابْنُ مَرْيَمَ ؕ قُلْ فَمَنْ يَّمْلِكُ مِنَ اللّٰهِ شَيْـًٔا اِنْ
اَرَادَ اَنْ يُّهْلِكَ الْمَسِيْحَ ابْنَ مَرْيَمَ وَاُمَّهٗ وَمَنْ فِى
الْاَرْضِ جَمِيْعًا ؕ وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ
وَمَا بَيْنَهُمَا ؕ يَخْلُقُ مَا يَشَآءُ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ
شَىْءٍ قَدِيْرٌ ﴿١٧﴾

17. **நிச்சயமாக அல்லாஹ் மர்யமுடைய மகன் மஸீஹுதான் என்று கூறினார்களே அவர்கள் திண்ணமாகக் காஃபிராகி விட்டார்கள். மர்யமுடைய மகன் மஸீஹையும், அவரது அன்னையையும், இன்னும் பூமியிலுள்ளவர் அனைவரையும் (அல்லாஹ்) அழிக்க நாடினால், அல்லாஹ்வை விட்டு (அதனைத் தடுக்க) எவ்வஸ்துவையேனும் சொந்தப்படுத்திக் கொண்டிருப்பவர் எவர்? என்று (நபியே) நீர் கூறுவீராக. மேலும், வானங்களினுடையவும், பூமியினுடையவும், இவ்விரண்டிற்கிடையிலுள்ளவற்றின் ஆட்சி அல்லாஹ்விற்கிருக்கிறது. அவன் நாடியதை சிருஷ்டிப்பான். மேலும், அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுள்ளவன்.**

இந்த ஆயத்து நஜ்ரானிலுள்ள கிறிஸ்துவர்களைக் குறித்து அருளப்பட்டது. இதற்கு முன்னுள்ள ஆயத்தின் விரிவுரையிற் சொல்லப்பட்டபடி இங்கு வசிப்பவர்கள் யஃகூபிய்யா பிரிவினர். அல்லாஹுத்தஆலாதான் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்றும், குறிப்பிட்ட ஒரு மனிதரின் உடலில் அல்லது ஆத்மாவில் அல்லாஹுத்தஆலா இறங்குவான் என்றும் நம்புபவர்கள். ஆதலால், அவர்களது கொள்கை குஃப்ரானது என்பதாக இந்த ஆயத்தில் விளக்கப்பட்டிருப்பதுடன், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவரது தாயாரும் மனிதர்கள்தான், அவர்களையும் உலகிலுள்ள மற்றெல்லாரையும் அல்லாஹுத்தஆலா அழித்து விடவிரும்பினால் அதனைத் தடுத்து நிறுத்த ஒருவராலும் முடியாது என்ற விபரமும் கூறி, அவர்களும் அவனால் சிருஷ்டிக்கப்பட்ட அடியார்கள் என்பதும், அவன் சர்வ வல்லமையுள்ளவன் என்பதும் இந்த ஆயத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

وَقَالَتِ الْيَهُوْدُ وَالنَّصٰرٰى نَحْنُ اَبْنٰٓؤُا اللّٰهِ وَاَحِبَّآؤُهٗ ؕ
قُلْ فَلِمَ يُعَذِّبُكُمْ بِذُنُوْبِكُمْ ؕ بَلْ اَنْتُمْ بَشَرٌ مِّمَّنْ
خَلَقَ ؕ يَغْفِرُ لِمَنْ يَّشَآءُ وَيُعَذِّبُ مَنْ يَّشَآءُ ؕ
وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا ؗ وَاِلَيْهِ
الْمَصِيْرُ ﴿١٨﴾

18. **மேலும், "நாங்கள் அல்லாஹ்வின் புதல்வர்கள்; இன்னும் அவனுக்குப் பிரியமானவர்கள்" என்று யூதர்களும் கிறிஸ்துவர்களும் கூறினர். அவ்வாறாயின், உங்களது பாவங்களுக்காக நீங்கள் ஏன் வேதனை செய்யப்படுகிறீர்கள்? (நீங்கள் அவனுக்குப் பிரியமானவர்கள் என்பது) அல்ல, அவன் சிருஷ்டித்தவர்களில் நின்றும் நீங்களும் மனிதர்கள்தாம். அவன்**

நாடியவரை மன்னிப்பான். இன்னும் அவன் நாடியவரை வேதனை செய்வான். மேலும், வானங்கள், பூமி, இவையிரண்டிற்கு இடையிலுள்ளவற்றின் ஆட்சி அல்லாஹ்விற்கே இருக்கிறது. இன்னும் அவனளவிலேயே மீளுவது மிருக்கிறது என்று (நபியே) நீர் கூறுவீராக.

"ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் புதல்வர், அவரைச் சேர்ந்தவர்களாகிய நாங்களும் அவனது புதல்வர்களே" என்று யூதர்களும், "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் புதல்வர், அவரைச் சேர்ந்த நாங்களும் அவனது புதல்வர்களே" என்று கிறிஸ்துவர்களும் கருதி, மற்றைய ஜனங்களைப் பார்க்கினும் அல்லாஹுத் தஆலாவிடத்தில் தங்களுக்கு விசேஷமான மேன்மையும், கௌரவமும் இருப்பதாக அவர்கள் ஒவ்வொருவரும் கூறிக் கொண்டிருந்தனர். இவ்விரு பிரிவினரின் இக்கருத்தை இறைவன் இந்த ஆயத்தில் மறுத்திருக்கிறான்.

அறிந்து கொள்:- அல்லாஹுத்தஆலாவிற்குப் பிரியமானவர்கள் அவனது ஒலிமார்கள்தான். ஆனால் அவர்களது அந்தஸ்திற்குத் தக்கவாறு அவர்கள் பால் அவனது பிரியமிருந்து வரும். இவர்களில் அவாம் அதாவது பாமரர்களும் இருக்கிறார்கள். கவாஸ்ஸு அதாவது விசேஷமானவர்களும் இருக்கிறார்கள். அகஸ்ஸு அதாவது ரொம்ப விசேஷமானவர்களும் இருக்கிறார்கள்.

يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ قَدْ جَآءَكُمْ رَسُولُنَا يُبَيِّنُ لَكُمْ عَلَىٰ
فَتْرَةٍ مِّنَ ٱلرُّسُلِ أَن تَقُولُوا۟ مَا جَآءَنَا مِنۢ بَشِيرٍ
وَلَا نَذِيرٍ فَقَدْ جَآءَكُم بَشِيرٌ وَنَذِيرٌ وَٱللَّهُ عَلَىٰ كُلِّ
شَىْءٍ قَدِيرٌ ۝

19. வேதக்காரர்களே! "நற்செய்தி சொல்பவரோ இன்னும் எச்சரிக்கை செய்பவரோ எங்களிடம் வரவில்லை" என்று நீங்கள் (காரணம்) கூறாமலிருப்பதற்காக ரசூல்மார்கள் (வராமல்) தடைபட்டிருந்த காலத்தில் (நம்முடைய மார்க்க கட்டளைகளை) உங்களுக்கு விபரிப்பவராக நம்முடைய ரசூல் உங்களிடம் வந்திருக்கிறார். ஆகவே, உங்களிடம் நற்செய்தி சொல்பவரும் எச்சரிக்கை செய்பவரும் நிச்சயமாக வந்து விட்டார். மேலும், அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுள்ளவன்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 1700 வருடங்களுக்குப் பிறகு, ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்தார்கள். இவ்விருவருக்கு மிடையிலுள்ள இக்காலத்தில் பனீ இஸ்ராயீல்களில் ஒருவருக்குப் பின் ஒருவராக தொடர்ந்து ஆயிரம்பேர் நபிமார்களாக வந்திருக்கிறார்கள். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்குமிடையில் நபிமார்கள் வரவில்லை. எனவேதான் இதனை தடைபட்டிருந்த காலம் என்று கூறப்படுகிறது. ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 599 வருடங்களுக்குப் பிறகுதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்தார்கள். 546 வருடங்களென்றும் ஒரு ரிவாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "இவ்வளவு நீண்ட காலத்தில் இஸ்ராயீலின் சந்ததியினரில் மூவரும் அறபியரில் ஒருவரும் ஆக நான்கு பேர் நபிமார்களாக இருந்தனர்" என்று கல்பீ ரிவாயத்துச் செய்திருக்கிறார். சிலர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது சிஷ்யர்களான ஹவாரிய்யீன் களையும் நபிமார்கள் என்று கூறுவதுண்டு. ஆயினும், தமக்கும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மிடையில் நபி இல்லை என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருப்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருப்பதால், நபிமார்கள் ஒருவருமே வரவில்லை என்பதுதான் ஊர்ஜிதமான சொல்.

அறபியரில் ஒருவர் நபியாக வந்திருப்பதாக கல்பீ ரிவாயத்துச் செய்திருப்பதைப் பற்றிச் சிறிது விபரிப்பது அவசியமாகும். இவர் எமன் தேசத்திலுள்ள ஏடன் பிரதேசத்தில் வசித்தவர். இவரது பெயர்

காலிதுப்னு ஸனானில் அபஸீ என்பதாகும். இவரது புதல்வி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தபோது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "தனது சமூகத்தார் வீணாக்கி விட்ட ஒரு நபியின் புதல்விக்கு மர்ஹபா" என்பதாகக் கூறி வரவேற்றிருக்கிறார்கள். இதனை ஆதாரமாக வைத்துத்தான் இவரைச் சிலர் நபியெனக் கருதுகிறார்கள். என்றாலும், இவரது நுபுவ்வத்து இவர் உலகில் வாழும்போது வெளியாகவில்லை. இவர் தனது மரணத்திற்குப் பிறகு, ஆலமுல் பர்ஜகில் நடக்கிற விஷயங்களை நேரில் தெரிந்து மீண்டும் வந்து கூறுவதாக தமது ஜனங்களிடம் கூறினார் என்பது மட்டும்தான் இவரைக் குறித்து வெளியாகி இருக்கிறது. இவரைப் பற்றிய விபரம் **ஃபுதூஸுல் ஹிக்கம்** என்ற நூலிலும் காணப்படுகிறது. அதன் சாராம்சம் வருமாறு.

இவர் தமது ஜனங்களுடன் அதன் (ஏடன்) பிரதேசத்தில் வசித்துக் கொண்டிருந்தார். ஒரு பொதும்பிலிருந்து பெருந்தீ விபத்து ஏற்பட்டு பயிர்களும் வெள்ளாண்மைகளும் வெந்தன. இவரிடம் ஜனங்கள் முறையிட்டனர். இவர் தனது கைத்தடியால், அந்நெருப்பை அடித்து அணைத்துக்கொண்டே அப்பொதும்பு வரை சென்று, அப்பொதும்பிற்குள் செல்வதற்கு முன், தமது புதல்வர்களிடம் "நான் நெருப்பை அணைத்துக் கொண்டே இப்பொதும்பினுள் செல்லப் போகிறேன். சரியாக மூன்று நாட்கள் பூர்த்தியான பின் என்னை அழைத்தால்தான் நான் நலமாகத் திரும்ப வரமுடியும். அதற்கு முன்னர் அவசரப்பட்டு அழைத்தால், நான் திரும்பி வருவேன். என்றாலும், இறந்து விடுவேன்" என்று கூறி, அப்பொதும்பிற்குட் சென்றார். ஆனால், அவர்கள் இரண்டு நாட்கள் வரை பொறுத்திருந்து, மூன்றாவது நாளில் அவர் இறந்திருப்பார் என்று எண்ணி, அவரை அழைத்தனர். உடனே, அவர் அங்கிருந்து திரும்ப வந்து "எனது கட்டளையை நீங்கள் கவனிக்கவில்லை. என்னை நீங்கள் வீணாக்கி விட்டீர்கள். இனி நான் இறந்திடுவேன். என்னை அடக்கம் செய்து, நாற்பது நாள் கழித்து, எனது கப்ரை மீண்டும் தோண்டினால், நான் எழுந்து ஆலமுல் பர்ஜகு, கப்ரு ஆகியவைகள் சம்பந்தமாக நபிமார்கள் கூறியவற்றைப் பற்றி உறுதியான விஷயங்களைக் கூறுவேன்" என்று

கூறி இறந்து விட்டார். அவர் அக்குகையிலிருந்து திரும்ப வந்தபோது அவரது தலையில் அவர்கள் சப்தமிட்டதால் ஏற்பட்ட நோவினை அடையாளங்கள் காணப்பட்டன. அவர் கூறியதுபோல, அவரது ஜனங்கள் நாற்பது நாட்களுக்குப் பிறகு கப்ரைக் தோண்ட விரும்பியதற்கு, அவருடைய மக்கள் சம்மதிக்க வில்லை. ஆகவே, அவர்கள் அவரது வஸிய்யத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதனைக் குறித்துத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவரது புதல்வியிடம் "அவரது ஜனங்கள் அவரை வீணாக்கி விட்டனர்" என்று கூறி இருக்கிறார்கள். இவர் முற்காலத்து நபிமார்கள் ஆலமேபர்ஜக், கப்ரு முதலியவற்றைப் பற்றிக் கூறியுள்ள விபரங்களை உறுதிப்படுத்திப் பிரசாரம் செய்ய விரும்பினார். இதனைத் தவிர, அந்நபிமார்களைப்போல் தனி ஷரீஅத்தையோ வேதத்தையோ கூறவில்லை.

وَإِذْ قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ يَٰقَوْمِ اذْكُرُوا نِعْمَةَ
اللَّهِ عَلَيْكُمْ إِذْ جَعَلَ فِيكُمْ أَنبِيَاءَ وَجَعَلَكُم
مُّلُوكًا وَآتَاكُم مَّا لَمْ يُؤْتِ أَحَدًا مِّنَ الْعَٰلَمِينَ ⑳

20. மேலும் "எனது சமூகத்தாரே! உங்களில் நபிமார்களை ஏற்படுத்தியும், உங்களை அரசர்களாக ஆக்கியும், அகிலத்தாரில் ஒருவருக்கும் கொடுக்காததை உங்களுக்கு அவன் கொடுத்த நேரத்தில் உங்கள் மீது அல்லாஹ் புரிந்துள்ள அருட்கொடையை எண்ணிப் பாருங்கள்". என்று மூஸா தனது சமூகத்தாருக்குக் கூறிய நேரத்தை (நபியே வேதக்காரருக்கு ஞாபக மூட்டுவீராக).

அகிலத்தாரில் ஒருவருக்கும் கொடுக்காததை என்பதற்கு இஸ்ராயீலின் சந்ததியினர் காலத்திற்கு முன்னர் எவருக்கும் கொடுக்காததை அவர்களுக்கு அவன் அளித்துள்ளான் என்பது கருத்து. இஸ்ராயீலின் சந்ததியினர், ஃபிர்அவ்னை விட்டுத் தப்பிக் கொள்வதற்காக, அவர்களுக்கு கடல் பிளந்தது, அவர்களது

பகைவனான ஃபிர்அவ்னும், அவனது கட்சியினரும் தண்ணீரில் மூழ்கியது, அவர்களுக்கு மேகம் குடைப்பிடித்தது, மன்னு ஸல்வா என்ற உணவு அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இன்னும் இவை போன்ற பல அரும் பெருங் காரியங்களை இவ்வசனம் சுட்டிக் காண்பிக்கிறது. இக்காரியங்கள் பனூ இஸ்ராயீல்களுக்கல்லாமல் வேறு யாருக்கும் அதற்கு முன் இறைவனால் அளிக்கப் படவில்லை.

நபித்துவத்தைப் பார்க்கினும் பெரும் பாக்கியம் வேறு ஒன்றுமில்லை. ஆகவே, அவர்களில் வேறு எந்த வர்க்கத்தாரிலும் தோன்றாத அத்தனை ஏராளமானவர்கள் நபிமார்களாக இருந்தார்கள். நுபுவ்வத்துடன் மட்டுமில்லாமல், அவர்களில் பலர் அரசர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஆகவே, இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் அவர்கள் மிகப்பெரும் பாக்கியங்களை அடைந்திருக்கிறார்கள். தவிர, **முலூக்கன்** என்பதற்கு மற்றொரு விதமான பொருளும் உண்டு. ஃபிர்அவ்னுடைய ஆட்சியில் பனூ இஸ்ராயீல்கள் ஜிஸ்யாவரி கொடுத்துக் கொண்டு, கிப்தியருக்குக் கீழ் இருந்தனர். அப்புறம், அவர்கள் இவ்விதமான அடிமை நிலையிலில்லாமல், தங்களுக்குத் தாங்களே எஜமானர்களாகி விடுதலை யடைந்திருந்தனர். ஆகவே, முலூக்கன் என்ற சொல்லுக்கு "விடுதலையடைந்தவர்கள்" என்றும் பொருளுண்டு என்பதாகச் சிலர் கூறி இருக்கிறார்கள். சுகமாக இருந்து வாழ்வதற்குத் தகுந்த மனைவியும், ஊழியஞ் செய்வதற்கு வேலைக்காரர்களும் எவருக்கு இருக்கிறார்களோ, அவர்கள் முலூக்குகள்தாம் என்பதாகச் சிலர் பொருள் கூறி இருக்கிறார்கள். எவருக்கு விசாலமான வீடும், அதில் தாராளமான தண்ணீரும் இருக்கிறதோ, அவர் 'மலிக்கு' என்பதாக வேறு சிலர் கூறி இருக்கிறார்கள். ஆகவே, இஸ்ராயீலின் சந்ததியினர்தான் முதல் முதலாக பணியாளர்கள், ஏவலாளர்கள் முதலியவற்றை நியமித்து, கம்பீரமாக வாழ்ந்தார்கள் என்றும், அவர்களுக்கு முன் வேறு யாரும் இவ்விதமாக வாழவில்லை என்றும் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருப்பதுடன் வேலைக்காரர்களும் ஆடம்பரங்களும் உள்ளவர்களுக்கு முலூக்குகள்

என்று பெயர் என்பதாகவும் கூறி இருக்கிறார்கள். இம் மூவகைக் கருத்துப்படி பனூ இஸ்ராயீல்கள் எல்லோருமே முலூக்குகளாக இருந்திருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது.

يٰقَوْمِ ادْخُلُوا الْاَرْضَ الْمُقَدَّسَةَ الَّتِىْ كَتَبَ اللّٰهُ
لَكُمْ وَلَا تَرْتَدُّوْا عَلٰٓى اَدْبَارِكُمْ فَتَنْقَلِبُوْا خٰسِرِيْنَ ﴿٢١﴾

21. எனது சமூகத்தினரே! உங்களுக்காக அல்லாஹ் விதித்திருக்கிற பரிசுத்த பூமியில் பிரவேசியுங்கள். இன்னும் புறமுதுகிட்டு நீங்கள் திரும்பி விடாதீர்கள். (அவ்வாறு செய்தால்) அப்பொழுது நஷ்டவாளர்களாக நீங்கள் திரும்பி விடுவீர்கள் (என்று கூறிய நேரத்தை ஞாபக மூட்டுவீராக).

பைத்துல் முகத்தஸ் என்னும் பள்ளிவாசல் இருக்கும் பிரதேசம் ஷிர்க்கு என்ற அசுயையை விட்டுப் பரிசுத்தமாக்கப்பட்டு, நபிமார்களுக்கு நிலையான இடமாகவும், மூமின்கள் வசிக்குமிடமாகவும் இருப்பதால் அதற்குப் பரிசுத்த பூமி என்று பெயர் வந்தது. இந்தப் பிரதேசத்தை இறைவன் பனூ இஸ்ராயீல்களுக்குத் தாயகமாக ஆக்கினான். என்றாலும், அவர்கள் நபிமார்களை எதிர்த்து இறைவனது கட்டளைக்கு மாறு செய்ததுடன் பலவிதமான குற்றங்களை அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டே இருந்ததால், அப்பிரதேசத்தை விட்டு அவர்களை மாற்றிவிட்டான். இவ்விபரம் திருக்குர்ஆனில் பல இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

وَلَا تَرْتَدُّوْا عَلٰٓى اَدْبَارِكُمْ **நீங்கள் புறமுதுகிட்டு திரும்பி விடாதீர்கள்** என்பதற்கு அங்குள்ள பலமிக்கவர்களைக் கண்டு பீதியடைந்து, நீங்கள் யுத்தம் செய்யாமல் புறமுதுகுகாட்டி விடாதீர்கள் என்பது கருத்து. தவிரவும், அல்லாஹுத்தஆலா ஏவிய கட்டளைக்கு மாறாக நீங்கள் திரும்பிவிடவேண்டாம் என்றும் பொருள் செய்யலாம்.

قَالُوْا يٰمُوْسٰٓى اِنَّ فِيْهَا قَوْمًا جَبَّارِيْنَ ۖ وَاِنَّا لَنْ

نَّدْخُلَهَا حَتّٰى يَخْرُجُوْا مِنْهَا ۚ فَاِنْ يَّخْرُجُوْا مِنْهَا

فَاِنَّا دٰخِلُوْنَ ﴿٢٢﴾

22. (அதற்கு அவர்கள்) "மூஸாவே, நிச்சயமாக அங்கு வம்பர்களான சமூகத்தார் இருக்கிறார்கள். இன்னும், அதனை விட்டு அவர்கள் வெளியேறும் வரை, அங்கு நிச்சயமாக நாங்கள் பிரவேசிக்கவே மாட்டோம். ஆனால், அதனை விட்டு அவர்கள் (தாங்களாகவே) வெளியேறுவார்களாயின், நிச்சயமாக நாங்கள் (அங்கு) பிரவேசிக்கிறவர்களாக இருக்கிறோம்". என்று கூறினார்கள்.

இதற்கு முந்தி 12வது ஆயத்தில் கூறியபடி வேவு பார்ப்பதற்காக அனுப்பப்பட்ட பன்னிரண்டு பொறுப்பாளர்களும் அத்தேசத்திற்குள் சென்று, திரும்பவந்து, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அங்குள்ள மனிதர்களின் பலத்தையும், உயரத்தையும், பயங்கரமான தோற்றத்தையுங் கூறியதுடன், பனூ இஸ்ராயீலிலுள்ள ஒரு மனிதர் அங்குள்ள மனிதரின் பாதத்தின் நடுவிலுள்ள சந்துக்குள் நுளைந்து கொள்ளத்தக்கவாறு அவ்வளவு உயரமாகவும், பருமனாகவும் இருக்கிறார்கள் என்றுங் கூறினார்கள். அதற்கு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்விபரத்தைப் படைவீரர் களுக்குக் கூறிவிடவேண்டாம், அவர்கள் பயந்து விடுவார்கள். ஆதலால், மறைத்து வையுங்கள் என்று கூறி வைத்தார்கள். என்றாலும், அப்பன்னிருவரில் இருவர் நீங்கலாக மற்றைய பத்துப் பேரும் தங்கள் உறவினர்களுக்கு இதனைக் கூறிவிட்டதால், அவர்கள் பீதியடைந்து, இந்த ஆயத்தில் கண்டவாறு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு பதிற் கூறினார்கள்.

قَالَ رَجُلٰنِ مِنَ الَّذِيْنَ يَخَافُوْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمَا

ادْخُلُوْا عَلَيْهِمُ الْبَابَ ۚ فَاِذَا دَخَلْتُمُوْهُ فَاِنَّكُمْ غٰلِبُوْنَ ۚ

وَعَلَى اللّٰهِ فَتَوَكَّلُوْۤا اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿٢٣﴾

23. (ஆனால், அல்லாஹ்வை) அஞ்சுவார்களே அவர்களில் நின்றுமுள்ள (பொறுப்பாளர்களான) இரண்டு மனிதர் அவ்விருவர் மீது அல்லாஹ் அருட்கொடை யளித்துள்ளான் (விரோதிகளாகிய) அவர்கள் மீது அவ்(வூர்) வாசலில் பிரவேசியுங்கள். ஆகவே, அதில் நீங்கள் பிரவேசித்தவுடன், நிரந்தரமாக நீங்கள்தான் மிகைத்தவர்கள். இன்னும், (உண்மையான) மூமின்களாக நீங்கள் இருப்பின், "அல்லாஹ்வின் மீதே தவக்கல் வையுங்கள்" என்று (தங்கள் சமூகத்தாரிடம்) கூறினார்கள்.

இதற்கு முந்திய ஆயத்தில் கூறப்பட்டுள்ள பன்னிரண்டு பொறுப்பாளர்களில் பத்துப்பேர் நீங்கலாக, பாக்கியுள்ள இரண்டு பேரும் தங்கள் சமூகத்தாரிடம் சென்று கூறிய விபரம் இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விருவரும் அல்லாஹுத்தஆலாவை அஞ்சுபவர்கள், பகைவரை அஞ்சாதவர்கள். இவ்விருவரும் அவர்களை நோக்கி "நீங்கள் நகரத்தின் தலைவாசல் வழியாகப் பிரவேசியுங்கள். அவர்கள் உருவத்தில்தான் பெரியவர்களாக இருக்கிறார்களேயன்றி காரியத்தில் இல்லை, கோழையர்கள், மன தைரியமில்லாதவர்கள். நீங்கள் அவர்களது ஊரின் தலைவாயலில் பிரவேசித்த உடனேயே, அவர்களுடன் யுத்தஞ் செய்ய வேண்டிய அவசியமின்றி, நீங்கள் வெற்றி பெறுவீர்கள்" என்று கூறினர். இவ்விபரம் இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

قَالُوْا يٰمُوْسٰۤى اِنَّا لَنْ نَّدْخُلَهَاۤ اَبَدًا مَّا دَامُوْا

فِيْهَا فَاذْهَبْ اَنْتَ وَرَبُّكَ فَقَاتِلَاۤ اِنَّا هٰهُنَا

قٰعِدُوْنَ ﴿٢٤﴾

24. "மூஸாவே! நிச்சயமாக நாங்கள், அதில் அவர்கள் இருக்கும் காலமெல்லாம், அதில் ஒருபோதும் நாங்கள் பிரவேசிக்கவே மாட்டோம். ஆகவே, நீரும், உமது றப்பும் சென்று யுத்தம் புரியுங்கள். நிச்சயமாக நாங்கள் இங்கு உட்கார்ந்திருக்கிறவர்களே" என்று கூறினார்கள்.

இதற்கு, முந்திய 23 வது ஆயத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் இவ்விருவரது சொல்லையும் அந்த ஜனங்கள் பொருட்படுத்தாமல், ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இந்த ஆயத்திற் கண்டபடி கூறி யுத்தத்திற்குச் செல்ல மறுத்து விட்டனர்.

قَالَ رَبِّ إِنِّي لَآ أَمْلِكُ إِلَّا نَفْسِي وَأَخِي فَافْرُقْ
بَيْنَنَا وَبَيْنَ الْقَوْمِ الْفٰسِقِينَ ۝

25. (அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் இறைவனிடம்) "எனது றப்பே, என்னையும் என் சகோதரரையும் தவிர, (மற்றவர்களை) நான் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. ஆகவே, எங்களுக்கிடையிலும், (உனது கட்டளைக்குக்) கீழ்ப்படியாதவர்களான இந்த ஜனங்களுக்கு மிடையிலும் தீர்ப்புச் செய்வாயாக" என்று கூறினார்.

தம்முடைய ஜனங்கள் முன்னேறி யுத்தம் செய்ய மறுத்து, பிடிவாதமாக இருப்பதை, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உணர்ந்து, மிகுந்த துக்கத்துடனும், கவலையுடனும் அல்லாஹுத்தஆலாவிடம் இந்த ஆயத்தில் சொல்லப்பட்டவாறு முறையிட்டார்கள். இவ்விதமான முறையில் கூறுவதால், அல்லாஹுத் தஆலாவின் கிருபையும் உதவியும் ஏற்படும். இவ்விதமாக ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறி தமக்கும், தமது சகோதரருக்கும் உரியவாறும், இறைவனது கட்டளைக்கு மாறு செய்து மீறிய ஜனங்களுக்குத் தக்கவாறு அவர்களுக்கும் தீர்ப்புச் செய்யுமாறு பிரார்த்தித்தார்கள்.

قَالَ فَإِنَّهَا مُحَرَّمَةٌ عَلَيْهِمْ أَرْبَعِينَ سَنَةً
يَتِيهُونَ فِي الْأَرْضِ فَلَا تَأْسَ عَلَى الْقَوْمِ
الْفٰسِقِينَ ۝

26. "ஆகவே, நிச்சயமாக அது நாற்பது வருடங்களுக்கு அவர்கள் மீது விலக்க (ஹராமாக்க)ப் பட்டிருக்கிறது. பூமியில் அவர்கள் (தட்டழிந்து) திரிவார்கள். ஆதலால், ஃபாஸிக்கான ஜனங்களுக்காக நீர் கவலைப்படாதீர்" என்று (இறைவன்) கூறினான்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் துஆ கேட்டுவிட்டுப்பிறகு கவலைப்பட்டார்கள். ஆதலால், இறைவன் அந்த துஆவை அங்கீகரித்ததுடன், தனது கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் மீறுகிறவர்களான ஃபாஸிக்குகளுக்காக நீர் வருந்த வேண்டியதில்லை என்றும் சமாதானம் கூறி இருக்கிறான். அக்காலத்தில் பனூ இஸ்ராயீல்களின் ஜனத்தொகை ஆறு லட்சம், அவர்கள் ஆறு மைல் பரப்பளவுக்கு பரவி இருந்தனர். அவர்கள் அந்த ஊருக்குச் செல்வதற்காக ஒவ்வொரு நாளும் ஆறுகாத மைல் தூரம் நடப்பார்கள். சூரியன் மறையும்போது பார்த்தால், முன்னர் அவர்கள் புறப்பட்ட இடத்திலே இருப்பார்கள். இரவெல்லாம் நடந்தால் பொழுது விடியும்போது, அந்தப்பழைய இடத்திலேயே இருப்பார்கள். இவ்விதம் அவர்கள் நாற்பது வருடகாலம் அந்த வனாந்தரத்தில் தட்டுக் கெட்டு, அலைந்து கொண்டிருந்தனர். ஆனால், அவர்களுக்குப் பகற்பொழுதில் மேகம் குடைப்பிடித்துக் கொண்டிருந்ததால், நிழல் கிடைத்தது. மன்னு ஸல்வா என்ற உணவு கிடைத்தது. இவற்றைப் பற்றிய விபரம் சூரத்துல் பக்கரா 57வது ஆயத்திலும் சொல்லப் பட்டிருக்கிறது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம், ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவரும் அவர்களுடன் இருந்து கொண்டிருந்ததால், அவர்களுடைய பரக்கத்தினால், அந்த ஜனங்களுக்கு நிழலும், உணவும் கிடைத்ததால், வனாந்தரத்தில் மற்றவர்கள் வழக்கமாக அனுபவிக்கும் கஷ்டங்களை அவர்கள் அனுபவிக்கவில்லை. தவிரவும், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களை நெருப்பில் போட்டபோது, இறைவனது கட்டளைப்படி அந்த நெருப்புக்கிடங்கு ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்குப் பூங்காவனமாக மாறியதுபோல, இந்த வனாந்தரத்தில் பனூ இஸ்ராயீல்கள் தட்டுக் கெட்டு அலைந்து வருந்தினாலும், ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம், ஹாரூன்

அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவருக்கும் எவ்வித வருத்தமும் ஏற்படவில்லை.

பனூ இஸ்ராயீல்களுடன் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம், ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவரும் இருந்ததால், அந்த ஜனங்களுக்கு வந்த துர்ப்பாக்கியத்தில் இவ்விருவருக்கும் கொஞ்சம் கிடைத்தது. அதாவது, அவர்களுடன் இவ்விருவரும் அந்த வனாந்தரத்தில் மேகத்தின் நிழலையும், மன்னுஸல்வா என்ற உணவையும் பெற்றுக் கொண்டார்கள். இதற்குக் காரணம் நல்லோர்களுடன் இருப்பதால் கிடைக்கும் பாக்கியத்தையும், தீயோர்களுடன் இருப்பதால், ஏற்படும் கெடுதல்களையும் மற்றவர்கள் அறிவதற்காகவே என்று **தாவீலாத்துன்னஜ்மிய்யா** என்ற கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஊஜுப்னு உனுக்கை வெட்டியதாக உலமாக்கள் ஏகமனதாகக் கூறி இருப்பதால், இந்த நாற்பது வருடகாலம் சென்ற பிறகு, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனூ இஸ்ராயீல்களுடன் அரீஹா என்னும் நகரின் மீது படையெடுத்துச் சென்று, ஊஜுப்னு உனுக்கைக் கொன்று, அந்நகரைக் கைப்பற்றினார்கள். யூஷஉப்னு நூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அந்தப் படையின் முன்னணிச் சேனையில் இருந்தார்கள். அங்கு சிலகாலம் வசித்த பிறகுதான் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் வஃபாத்தானார்கள். அவர்களது கப்ரு எந்த இடத்திலிருக்கிறது என்பதை அல்லாஹுத்தஆலாதான் அறிவான் என்று தெரிகிறது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய வஃபாத்தைக் குறித்து வேறுவிதமான ரிவாயத்துகளும் உண்டு. ஆனால், இந்த விபரம்தான் மிகவும் சரியான ரிவாயத்து.

ஹளரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வஃபாத்தைக் குறித்த விபரம்:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறைவன் "நான் ஹாரூனை வஃபாத்தாக்கப் போகிறேன். ஆதலின், அவரை இன்ன மலைக்கு அழைத்துக் கொண்டுபோ" என்பதாக வஹீ அறிவித்தான். எனவே, ஹளரத் மூஸா

அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அந்தக் குறித்த மலைக்கு அழைத்துச் சென்றார்கள். அம்மலையில் ஒரு மரத்தினருகில் சென்றவுடன் அங்கு ஒரு வீடும், அவ்வீட்டில் ஒரு கட்டிலும், அக்கட்டிலில் ஒரு விரிப்பும், அவ்விரிப்பில் நல்ல சுகந்த வாடையும் இருக்கக் கண்டார்கள். இதனை ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பார்த்து ஆச்சரியமடைந்து "மூஸாவே! நான் இக்கட்டிலின் மீது படுத்து தூங்க விரும்புகிறேன்" என்று கூறினார்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இதற்கிசைந்து, "நல்லது, அதிற் படுத்துத் தூங்குங்கள்" என்று கூறவே, அவர்அதில் படுத்துத் தூங்கினார். அதில் படுத்துத் தூங்கியவுடன், மலக்குல் மௌத்து அலைஹிஸ்ஸலாம் வந்து விட்டார். அப்பொழுது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்த்து, "மூஸாவே, நீர் என்னைச் சதி செய்து விட்டீர்" என்று ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் கூறினார். அப்பால், அவரது உயிர் கைப்பற்றப்பட்ட பிறகு, அந்த வீடும், அந்த மரமும் அங்கிருந்து மறைந்து விட்டன. அக்கட்டில் ஜனாஸாவுடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டது.

பிறகு, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மட்டும் தனிமையாகத் திரும்பி வந்தபோது, பனூ இஸ்ராயீல்கள் அவரை நோக்கி, "நாங்கள் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது பிரியமாக இருக்கிறோம் என்ற பொறாமையினால், அவரை நீர் கொன்று விட்டீர்" என்று கூறினார்கள். அதற்கு அவர் "உங்களுக்கு என்ன மதியீனமா? அவர் என் சகோதரர், என் சகோதரரை நான் கொன்று விட்டதாக என்மீது அவதூறு கூறுகிறீர்களோ?" என்று சமாதானம் கூறினார். என்றாலும், இதனை அவர்கள் அங்கீகரிக்காமல் பின்னும் பின்னும் அதிகமாகவே கூறினர். ஆதலால், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இரண்டு ரக்கஅத்துத் தொழுது, இறைவனைப் பிரார்த்தித்தார்கள். உடனே, ஹாரூன் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் படுத்திருந்த கட்டில் கீழே இறங்கிற்று. வானத்திற்கும் பூமிக்குமிடையில் அந்தரத்தில் அக்கட்டிலையும் அதன்மீது அவரது உடலையும் அவர்கள் பார்த்து, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதை உண்மையென்று நம்பினார்கள்.

ரிவாயத்து:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும், ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அம்மலையின் மீது ஏறிச் சென்றார்கள். அங்கு ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் வஃபாத் தானார்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மட்டும் தமது ஜனங்களிடம் வந்து, தம் சகோதரரின் மரணச் செய்தியை அறிவித்தார். அப்பொழுது, பனூ இஸ்ராயீல்கள் அவரை நோக்கி "நீர்தான் அவரைக் கொன்றீர் என்று கூறி, அவரை நோவினை செய்தார்கள். ஆதலால், அல்லாஹுத்தஆலா மலக்குகளுக்குக் கட்டளையிட்டான். எனவே, ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களது உடலைத் தூக்கிக் கொண்டு, அவர்களுக்குச் சமீபத்தில் அவர்கள் வந்து, அவர் வஃபாத்தாகி விட்டார் என்று அறிவித்தனர். அப்புறம்தான் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் வஃபாத்தாகி விட்டார் என்பதாக பனூ இஸ்ராயீல்கள் உணர்ந்தனர். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் நிரபராதியானார்கள். பிறகு, மலக்குகள் அவரைத் தூக்கிக் கொண்டுசென்று, பூமியில் அடக்கம் செய்து விட்டார்கள். அவரை அடக்கம் செய்த இடத்தை ஒருவர்தான் அறிந்தார். மற்றவர்கள் அறியவில்லை. என்றாலும், அவரை இறைவன் ஊமையாகவும், செவிடராகவும் ஆக்கிவிட்டான் என்பதாக ஹளரத் அலிய்யுப்னு அபீதாலிப் ரலியல்லாஹுதஆலா அன்ஹூ அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தீஹ் என்ற அவ்வனாந்தரத்தில் இருக்கும்போது, ஹளரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வஃபாத்தானார்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வஃபாத்தாகுவதற்கு முன்பே, ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் வஃபாத்தாகி விட்டார். இருவரும் மலைக்குச் சென்றார்கள். அங்கு ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் வஃபாத் தானார்கள். அவரை அங்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அடக்கிவிட்டுத் திரும்பவந்தபோது, அவரது ஜனங்கள் அவரை நோக்கி "நீர் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொன்று விட்டீர்" என்று கூறினார்கள். அதற்கு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது சகோதரரை அடக்கிய இடத்திற்கு அவர்களை

அழைத்துச் சென்று "ஹாரூன்" என்று அழைத்தார்கள். உடனே, அவர் "ஆம்" என்று கூறிக் கொண்டு, தலையில் ஒட்டி இருந்த மண்ணைத் தட்டிக் கொண்டெழுந்தார். அப்பொழுது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "உம்மை நான் கொன்றேனா?" என்று வினவ, அவர் "இல்லை நான்தான் மரணமடைந்தேன்" என்று பதிற் கூறினார். அப்புறம்தான் அவர் மரணித்தார் என்பதாக பனூ இஸ்ராயீல்கள் ஒப்புக் கொண்டனர் என்று அம்ருப்னு மைமூனா ரலியல்லாஹுதஆலா அன்ஹூ அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வஃபாத்தான விபரம்:- ஒருநாள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது ஜனங்களைவிட்டு பிரிந்து காட்டின் பக்கமாகச் சென்று கொண்டிருந்த போது, ஒரு கப்ரை மலக்குகள் தோண்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து, இந்த கப்ரு மிக அழகாக இருக்கிறது என்றெண்ணி, அவர்களை நோக்கி "இந்த கப்ரு யாருக்காக" என்று வினவினார்கள். அதற்கவர்கள் "நாயனிடம் கண்ணியம் பெற்ற ஒரு அடியாருக்கு" என்பதாகப் பதிற் கூறினார்கள். அதற்கவர் "அந்த அடியார் நாயனிடம் மிக கௌரவம் பொருந்தியவராக இருக்க வேண்டும். இதனைப் பார்க்கினும் மிக அழகான படுக்கும் இடத்தை நான் பார்த்ததில்லை" என்று கூறினார். அதற்கு மலக்குகள் "கலீமுல்லாவே, இது உங்களுக்கிருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ?" என்று கேட்க "ஆம்" என்று அவர் பதிற் கூறினார். அப்பொழுது மலக்குகள் அவ்வாறாயின் இதற்குள் இறங்கி, நாயன் பால் முகத்தைத் திருப்பிப் படுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினர். உடனே, அவர் அதில் இறங்கிப் படுத்தார். மலக்குல் மௌத்து சுவர்க்கத்திலிருந்து ஒரு பழத்தைக் கொண்டு வந்து, அவரிடம் கொடுத்தார். அவர் அதனை வாங்கி முகர்ந்தவுடன் இலேசாக மூச்சுத் திணரி, பெருமூச்சு விட்டார், ரூஹு பிரிந்தது. மலக்குகள் அந்தக் கப்ரை மூடிவிட்டுச் சென்றார்கள்.

ரிவாயத்து:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் மலக்குல் மௌத்து வந்து, உமது நாயனுடைய அழைப்பிற்குப் பதில் கூறுவீராக என்று கூறினார். அப்பொழுது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவருடைய கண்ணில் ஒரு குத்து

குத்தினார். அதனால் அவருடைய கண் கழன்று விட்டது. ஆகவே, அவர் நாயனிடம் சென்று "மரணத்தை விரும்பாதவரிடம் என்னை நீ அனுப்பிவைத்தாய்; அவர் என் கண்ணைக் கழற்றி விட்டார்" என்று முறையிட்டார். அப்பொழுது, இறைவன் அவரது கண்ணைத் திரும்ப உண்டாக்கிவிட்டு "நீர் அவரிடம் சென்று, உமக்கு உயிருடனிருக்க விருப்பமா? உமக்கு உயிருடனிருக்க விருப்பமாக இருக்கும் பட்சத்தில், உமது கையை ஒரு மாட்டின் முதுகின் மீது வையும், உமது கையில் எத்தனை உரோமங்கள் அடங்குகின்றனவோ, அத்தனை வருடங்கள் நீர் உயிருடனிருக்கலாம் என்று கூறும்" என்பதாக இறைவன் கட்டளையிட்டான். மலக்குல் மௌத்து அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து, இவ்விபரத்தைக் கூறியபோது, அவர் "அதற்கப்பால் என்ன நடைபெறும்", என்று வினவினார். அதற்கு மலக்குல் மௌத்து "அதற்கப்பாலும் மரணமடைய வேண்டியதுதான்" என்று கூறினார். உடனே, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவ்வாறெனில் இப்பொழுதே வஃபாத்தாக வேண்டியதுதான் என்று கூறி "நாயனே, என்னை பைத்துல் முகத்தஸின் பூமிக்கு ஒரு கல்லெறியும் தூரத்திற்கு நெருக்கி வைப்பாயாக" என்று பிரார்த்தித்தார்கள். இப்பிரார்த்தனையின்படி ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அந்தப் பரிசுத்த பூமிக்குச் சமீபத்திலாக்கப்பட்டு, அவ்விடத்தில் வஃபாத்தானார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதுடன் நான் அவ்விடத்திலிருந்தால், உங்களுக்கு அவருடைய கப்ரை, சிவந்த மணல் மேட்டுக்குப் பக்கத்தில் பாதைக்கு மறுபுறத்தில் காண்பித்துத் தருவேன்" என்றுங் கூறினார்கள்.

இவ்விபரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உறுதியாக இருப்பதால், இதனை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், இதனை மறுப்பவர் பிதுஅத்துக்காரர் களாகத்தான் இருக்க வேண்டும் என்று முஹம்மதுப்னு யஹ்யா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருப்பதாக இமாம் தஅவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது தஃப்ஸீரில் கூறி

இருக்கிறார்கள். தவிர, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மலக்குல் மௌத்து அலைஹிஸ்ஸலாம் அவர்களது கண்ணைக் கழற்றும் வரை, அவர் மனித உருவத்தில், மனிதர்களிடம் நேருக்கு நேராக வநத கொண்டிருந்தார் என்றும், இச்சம்பவத்திற்குப் பிறகிருந்துதான் அவர் நேருக்கு நேராக வராமல் மறைவாக வருகிறார் என்றும் மற்றொரு ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய வஃபாத்திற்கு நாற்பது வருடங்கழித்து, ஹளரத் யூஷஃ அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நபிப்பட்டம் வந்தது. அப்புறம், அவர்கள் பனூ இஸ்ராயீல்களை அழைத்துக் கொண்டு அந்த வம்பர்கள் வசிக்கும் நகரைச் சுற்றி, ஆறு மாதகாலம் வரை முற்றுகையிட்டு, ஏழாவது மாதத்தில் வெள்ளிக் கிழமையன்று கொம்புகளால் ஊதினார்கள். இதன் சப்தத்தால் கோட்டைச் சுவர்கள் இடிந்து விழுந்தன. இவர்கள் ஊருக்குள் புகுந்து, அங்குள்ள வம்பர்களை உக்கிரமாகத் தாக்கி, அவர்களைத் தோற்கடித்தார்கள். அவர்களை வெட்டி வீழ்த்தாமல், பத்து இருபது பேர் ஒன்று சேர்ந்து, அவர்களுடைய கழுத்தில் ஏறி இருந்து கொண்டு, அவர்களது குரல் வளைகளை அறுத்தார்கள். இவ்விதம் அங்குள்ளவர்களை எல்லாம் அறுத்து மாய்ப்பதற்குள் சூரியன் மறையும் வேளை வந்தது. அப்பொழுது ஹளரத் யூஷஃ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் "நாயனே, சூரியனை மறையாமல் தடுத்துக் கொள்வாயாக" என்று பிரார்த்தித்ததுடன், சூரியனை நோக்கி "நீயும் அல்லாஹுத்தஆலாவின் வழிபாட்டில் இருக்கின்றாய். நானும் அவனது வழிபாட்டிலேயே இருக்கின்றேன். ஆதலால், நீ மறையாதே நில்" என்று கூறி, சந்திரனை நோக்கி "நீ உதயமாக வேண்டாம்" என்றார்கள். இதன்காரணமாக ஒரு ஸாஅத்து நேரம் சூரியன் மறையவுமில்லை. சந்திரன் உதயமாகவுமில்லை. அப்பால், எஞ்சியுள்ளவர்களையும் அறுத்து, அவ்வூரையும் கைப்பற்றி, அக்கம்பக்கத்திலிருந்த அரசர்களையும் பிடித்தார்கள். இதன் காரணமாக, ஷாம் தேசம் முழுவதும் பனூ இஸ்ராயீல்கள் வசமாயிற்று. அப்பால், ஹளரத் யூஷஃ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நூற்றுு இருபத்தாறாவது வயதில் வஃபாத்தானார்கள்.

ஹளரத் யூஷஃ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பைத்துல் முகத்தஸைக் கைப்பற்றப்போன சமயத்தைத் தவிர, மற்றபடி வேறு யாருக்கும் சூரியனை மறையாமல் தடுத்து வைக்கவில்லை என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காகவும் சூரியனைத் தடுத்து வைத்ததாக **தஃப்ஸீர் ஃபத்ஹுல் கரீம்** முதலிய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது வஃபாத்திற்கு இருபத்தேழு வருடங்கழித்து இது நிகழ்ந்ததாகவும், ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இருக்கும் போதே ஹளரத் யூஷஃ அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நபிப்பட்டம் கிடைத்து விட்டதாகவும் **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** சொல்லப்பட்டிருக்கிறது.

وَاتْلُ عَلَيْهِمْ نَبَأَ ابْنَيْ آدَمَ بِالْحَقِّ إِذْ قَرَّبَا قُرْبَانًا فَتُقُبِّلَ مِنْ أَحَدِهِمَا وَلَمْ يُتَقَبَّلْ مِنَ الْآخَرِ قَالَ لَأَقْتُلَنَّكَ قَالَ إِنَّمَا يَتَقَبَّلُ اللَّهُ مِنَ الْمُتَّقِينَ ﴿٢٧﴾

27. மேலும் (நபியே) ஆதமுடைய இரு புதல்வர்களது செய்தியை உண்மையைக் கொண்டு அவர்களுக்கு ஓதிக் காண்பியும். அவ்விருவரும் குர்பானியைக் குர்பானி செய்தபோது அவ்விருவரில் ஒருவரிடமிருந்து அங்கீகரிக்கப்பட்டது. இன்னும் மற்றொருவரிடம் இருந்து அங்கீகரிக்கப்படவில்லை. (அதற்கு அங்கீகரிக்கப்படாதவர்) நிச்சயமாக நான் உன்னைக் கொலை செய்வேன் என்று கூறினார். (அதற்கு அங்கீகரிக்கப்பட்டவர்) "அல்லாஹ் அங்கீகரிப்பதெல்லாம் (அவனுக்குப்) பயபக்தி செலுத்துபவர்களிடமிருந்து தான்" என்று கூறினார்.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது புதல்வர்களான காபீல், ஹாபீல் என்பவர்களுக் கிடையில் நடந்த விபரத்தைப் பற்றி வேதக்காரர்களுக்கு கூறும்படி, இந்த ஆயத்தில் நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிடப் பட்டிருக்கிறார்கள். அத்துடன் அச்செய்தியை இந்த ஆயத்திலிருந்து இறைவன் சுருக்கமாகவும் கூறி இருக்கிறான். அதன் விபரம் வருமாறு.

ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் ஒவ்வொரு சூலிலும் ஒரு ஆண் ஒரு பெண் ஆக இரண்டு குழந்தைகளைப் பிரசவித்துக் கொண்டிருந்தார். ஹளரத் ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்களை மட்டும் ஒற்றையாகப் பிரசவித்தார். முதலாவது சூலில் காபிலையும், அவரது சகோதரி இக்லீமாவும், இரண்டாவது சூலில் ஹாபீலையும் அவரது சகோதரி லுயூதாவையும் பிரசவித்தார். இந்நால்வரும் தக்க வயது வந்தபோது ஹாபீலுக்கு காபீலுடைய சகோதரி இக்லீமாவையும், காபீலுக்கு ஹாபீலுடைய சகோதரி லயூதாவையும் திருமணம் செய்து வைக்கும்படி இறைவன், ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வஹீ மூலம் கட்டளையிட்டான். அவ்வாறே செய்யப்பட்டது. என்றாலும், காபீலுடைய சகோதரி இக்லீமா மிகுந்த அழகு வாய்ந்தவள். ஆதலால், அழகான பெண்ணை ஹாபீல் திருமணம் செய்ததைக் குறித்து காபீலுக்குப் பொறாமை ஏற்பட்டதுடன், இவ்வாறு திருமணம் செய்விக்கும்படி இறைவன் கட்டளை யிடவில்லை என்றும், ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தாங்களாகவே இவ்வேற்பாட்டைச் செய்தார்களென்றும் கருதினார். இதன் காரணமாக ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம்முடைய அவ்விரு புதல்வர்களையும் அழைத்து "நீங்கள் இருவரும் இறைவனுக்குக் குர்பானி செய்யுங்கள். உங்களில் எவருடைய குர்பானி அங்கீகரிக்கப்படுகிறதோ அவர் அந்தப் பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்று கூறினார். அக்காலத்தில் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஹவ்வா, இவர்களது மக்கள் ஆகியவர்களைத் தவிர வேறு யாரும் மனிதப் பிறவியில் இல்லாததால், ஒரு தாய் தகப்பனுக்குப் பிறந்த சகோதர சகோதரிகளுக்குள் வெவ்வேறு சூலில் பிறந்திருக்கிற வித்தியாசத்தைக் கவனித்து திருமணம், செய்து கொடுக்க வேண்டிய திருந்தது. மேலும், அக்காலத்தில் குர்பானி செய்தால், அது அங்கீகரிக்கப்பட்டது என்பதற்கு அடையாளமாக, வானத்திலிருந்து புகையில்லாத நெருப்பு

இறங்கி வந்து குர்பானியைக் கரித்து இல்லாமலாக்கி விடுவது வழக்கம். குர்பானி அங்கீகரிக்கப்படா விட்டால் புகையில்லாத நெருப்பு வானத்திலிருந்து இறங்குவதில்லை. பறவைகளும், மிருகங்களும்தான் அதனைப் புசிக்க வேண்டும். மேலும், அக்காலத்தில் ஜனங்கள் அதிகமாக இல்லாததால் ஏழைகள் கிடையாது. ஆதலின் அது அங்கீகரிக்கப்படுவதற்கு வானத்திலிருந்து புகையில்லா நெருப்பு இறங்கி, அதனைத்தின்று விடுவது அடையாளமாக ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கட்டளைப்படி காபீலும், ஹாபீலும் குர்பானி செய்தனர். அதாவது ஹாபீல் என்பவர் ஆடுமாடு ஒட்டகைகளை வளர்ப்பவர்களாக இருந்ததால், கொளுத்த ஒட்டகையைக் குர்பானி செய்தார். கொளுத்த ஆட்டையும், பாலையும், வெண்ணெயையும் குர்பானி செய்தார் என்றும் கூறப்படுகிறது. காபீல் என்பவர் விவசாயியாக இருந்ததால், தம்மிடமுள்ள தானியத்தில் மிகத் தாழ்ந்ததை குர்பானி செய்தார். அக்காலத்தில் குர்பானி என்பது ஆடுமாடு ஒட்டகை போன்ற மிருகங்களை அறுத்துப் பலியிடுவதற்கு மட்டும் பெயரல்ல. அல்லாஹுத்தஆலாவின்பால் பக்திபூண்டு, அவனுக்காக அற்பணம் செய்யும் எந்த பொருளுக்கும் குர்பானி என்றுதான் பெயர். இருவரும் தம்மிடமுள்ளதைக் குர்பானி செய்தனர். என்றாலும், ஹாபீல் பக்தி அதிகமுள்ளவர். தம்மிடமுள்ள பிராணிகளில் நன்றாகக் கொளுத்ததைப் பார்த்துக் குர்பானி செய்தார். காபீலுக்கு அவ்வளவு பக்தி இருக்கவில்லை. இவ்விருவரின் மன நிலையை இறைவன் நன்கு தெரிந்தவன். ஆதலால், தன் மீது பக்தி கொண்டு செய்த ஹாபீலுடைய குர்பானியை அங்கீகரித்தான். காபீலுடைய குர்பானியை அங்கீகரிக்கவில்லை. ஆகவே, ஹாபீலின் மீது காபீலுக்குப் பொறாமையும் கோபமும் ஏற்பட்டது. ஆயினும், இதனைப் பகிரங்கமாகக் கூறவில்லை. ஆனால், ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பைத்துல்லாஹ்வை ஜியாரத்துச் செய்வதற்காக திருமக்காவிற்குச் சென்றிருந்தபோது (அக்காலத்தில் மக்கமா நகரம் நகரமாக உண்டாகவில்லை. அங்கு மனிதரது குடியிருப்பும் இருக்கவில்லை) ஹாபீலிடத்தில் காபீல் வந்து “உன்னை

நான் கொன்றுவிடுவேன்” என்று இறைவன் மீது சத்தியம் செய்து கூறினார். அதற்கவர், “ஏன்” என்று வினவியதற்கு, “அல்லாஹுத் தஆலா என்னுடைய குர்பானியை அங்கீகரிக்கவில்லை, உனது குர்பானியை அங்கீகரித்துக் கொண்டான். என்னுடைய அழகிய சகோதரியை நீ திருமணஞ் செய்து கொண்டாய், உனது அழகில்லாத சகோதரியை நான் திருமணம் செய்ய வேண்டிய தேற்பட்டது. ஆகவே, என்னைப் பார்க்கினும் நீதான் சிறந்தவன்” என்பதாக ஜனங்கள் கூறுவர். தவிரவும், எனது பிள்ளைகளைப் பார்த்து உனது பிள்ளைகள் பெருமையடிப்பர் என்று கூறினார். அதற்கு ஹாபீல் “எனது குர்பானியை இறைவன் அங்கீகரித்து, உனது குர்பானியை அங்கீகரிக்காததற்குக் காரணம், நம்மில் தக்வா இருப்பதும் இல்லாதிருப்பதுமேயாகும். இது என்னால் நிகழவில்லை. உனது மனப்பான்மையினால்தான் உனது குர்பானி அங்கீகரிக்கப் படவில்லை. இதற்காக, என்னை ஏன் கொல்ல வேண்டும்” என்று பதிற் கூறினார்.

لَئِنْ بَسَطْتَ إِلَيَّ يَدَكَ لِتَقْتُلَنِي مَا أَنَا بِبَاسِطٍ يَدِيَ إِلَيْكَ لِأَقْتُلَكَ ۖ إِنِّي أَخَافُ اللَّهَ رَبَّ الْعَالَمِينَ ﴿٢٨﴾

28. என்னை நீ கொல்வதற்காக என்பால் உனது கையை நீ நீட்டினாலும், உன்னை நான் கொல்வதற்காக எனது கையை உன்பால் நான் (சத்தியமாக) நீட்ட மாட்டேன், நிச்சயமாக நான் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹ்வை அஞ்சுகிறேன் (என்று ஹாபீல் கூறினார்).

ஹாபீல் என்பவர் காபீலைப் பார்க்கினும் அதிக பலசாலியாக இருந்தார். அப்படி இருந்தும், அவர் தற்காப்புக்காகக் கூட, காபீலை எதிர்க்க விரும்பவில்லை. ஏனெனில், தற்காப்புக்காக மற்றவரைக் கொல்வது கூட அக்காலத்திலிருந்த ஷரீஅத்தில் குற்றம் என்பதாக

விதிக்கப்பட்டிருந்தது. நமது ஷரீஅத்தில் தற்காப்புச் செய்து கொள்ள அனுமதி இருந்தாலும், ஹளரத் உதுமான் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் தற்காப்புச் செய்வதற்காகத் தம்மை வெட்ட வந்தவர்களை எதிர்க்காமலிருந்ததுபோல், தற்காப்பிற்காகவும் எதிர்க்காமலிருப்பது நமது ஷரீஅத்திலும் கூடும் என்பதாக இமாம் பகவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

إِنِّىٓ أُرِيدُ أَن تَبُوٓأَ بِإِثْمِى وَإِثْمِكَ فَتَكُونَ
مِنْ أَصْحَٰبِ ٱلنَّارِ ۚ وَذَٰلِكَ جَزَٰٓؤُا۟ ٱلظَّٰلِمِينَ ۝

29. என்(னைக் கொலை செய்வதற்குரிய) பாவத்தையும் (அதற்கு முன் நீ செய்துள்ள) உன் பாவத்தையுங் கொண்டு நீ மீண்டு, நரகவாதிகளில் உள்ளவராக நீ ஆகிவிடுவதை நிச்சயமாக நான் நாடுகிறேன். இன்னும் இது அநியாயக்காரர்களுக்குரிய கூலியாகும்.

காபீல் கொலை செய்வதற்காகத் தமது கையை நீட்டினாலும், தற்காப்பின் நிமித்தமாகக் கூட தமது கையை நீட்ட மாட்டேன் என்று ஹாபீல் கூறியதற்கு, இந்த ஆயத்தில் இரண்டாவது காரணம் சொல்லப்பட்டிருக்கிறது.

فَطَوَّعَتْ لَهُۥ نَفْسُهُۥ قَتْلَ أَخِيهِ فَقَتَلَهُۥ فَأَصْبَحَ مِنَ
ٱلْخَٰسِرِينَ ۝

30. ஆகவே, அவருக்கு அவருடைய மனம் அவரது சகோதரரைக் கொல்வதைச் சுலபமாக்கி வைத்தது. எனவே, அவரைக் (காபீல்) கொன்றார். ஆகவே, (இம்மை மறுமை இரண்டிலும்) நஷ்டவாளர்களில் உள்ளவராக அவர் ஆகிவிட்டார்.

காபீலுக்குக் கொலை செய்ய விருப்பமாக இருந்தும், எவ்விதம் கொலை செய்வது என்பது தெரியாமலிருந்தது. ஆதலின், இப்லீஸ்

மனித உருவத்தில் தோன்றி, ஒரு பறவையையோ அல்லது ஒரு பாம்மையோ பிடித்து, அதன் தலையை ஒரு கல்லின் மீது வைத்து, மற்றொரு கல்லைக் கொண்டு அதனை நசுக்கினான். இதனை காபீல் பார்த்துக் கொண்டு, ஹாபீலைப் பிடித்து இரண்டு கற்களுக்கிடையில் வைத்து, நசுக்கிக் கொன்றார். இதனைத் தவிர்த்துக் கொள்ள ஹாபீல் முயலாமல், காபீலுடைய கொலைச் செய்கைக்கு இணங்கிக் கொடுத்தார் என்றும் ஹாபீல் தூங்கும் போது காபீல் இவ்வாறு செய்தார் என்றும் கூறப்படுகிறது. இக்கொலைச் செய்கை தௌர் மலைக்குப் பக்கத்தில் என்றும், ஹிரா மலையின் அருகில் என்றும், பஸராவில் பெரிய மஸ்ஜிது இருக்கிற இடத்திலென்றும், நூர் மலையிலென்றும் கூறப்படுகிறது.

ஹாபீலைக் கொலை செய்ததால் அவருடைய தாய், தந்தை ஆகிய இருவருக்கும் காபீல் மீது கோபமேற்பட்டது. இதனால், உலகம் முடியும் வரை பழிக்கப்பட்டவராகி விட்டார். கியாமத்து நாளில் இக்கொலைக் குற்றத்திற்காக அவருக்குக் கடுமையான வேதனை ஏற்படும். ஆகவே, இரண்டு உலகிலும் காபீல் நஷ்டவாளராகி விட்டார் என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

فَبَعَثَ ٱللَّهُ غُرَابًا يَبْحَثُ فِى ٱلْأَرْضِ لِيُرِيَهُۥ
كَيْفَ يُوَٰرِى سَوْءَةَ أَخِيهِ ۚ قَالَ يَٰوَيْلَتَىٰٓ أَعَجَزْتُ
أَنْ أَكُونَ مِثْلَ هَٰذَا ٱلْغُرَابِ فَأُوَٰرِىَ سَوْءَةَ
أَخِى ۖ فَأَصْبَحَ مِنَ ٱلنَّٰدِمِينَ ۝

31. அப்பால், அவருடைய சகோதரரின் உயிரற்ற உடலை எப்படி அவர் மறைக்க வேண்டுமென்பதை அவருக்குக் காண்பிப்பதற்காக, பூமியில் தோண்டும்படியான ஒரு காகத்தை அல்லாஹ் அனுப்பினான். (அப்பொழுது காபீல்) "எனக்கு வந்த

கேடே! இந்தக் காகத்தைப்போல் நானிருந்து, எனது சகோதரரின் உயிரற்ற உடலை நான் மறைக்க இயலாமலாகி விட்டேனோ?'' என்று கூறி, கவலைப்படுபவர்களில் உள்ளவராக ஆகிவிட்டார்.

ஹாபீலை காபீல் கொலை செய்து விட்டு, உயிரற்ற அவரது உடலை அடக்கஞ் செய்யத் தெரியாமல், மரஞ்செடி முதலியவை இல்லாத ஒரு காட்டில் போட்டு விட்டார். என்றாலும், மிருகங்கள் அவ்வுடலைத் தின்று விடுமென்ற எண்ணத்தால், அதனை ஒரு கூடையில் போட்டு, தனது முதுகின் மீது வைத்து, நாற்பது நாட்கள் வரை சுமந்து கொண்டு அலைந்தார். ஒரு வருடம் சுமந்து திரிந்ததாகவும் கூறப்படுகிறது. பிறகு இறைவன் இரண்டு காகங்களை அனுப்பினான். அவைகள் சண்டை போட்டுக் கொண்டு இறுதியாக ஒன்று செத்தது. மற்றொரு காகம் தனது சொண்டினாலும், காலினாலும் பூமியில் பள்ளம் பறித்து, அதற்குள் அச்செத்த காகத்தை இழுத்துக் கொண்டு வந்து தள்ளி, மண்ணைப் போட்டு மூடிவிட்டது. இதனை, காபீல் பார்த்துக் கொண்டிருந்து, தமது சகோதரரின் உயிரற்ற உடலைக் குழி தோண்டி அடக்கினார். அப்போது தமது மதியீனத்தைப் பற்றி ''இக்காகத்தைப் போலுங் கூட நான் இருக்க முடியவில்லையே, எனது சகோதரரின் உடலை அடக்கஞ் செய்ய எனக்குத் தெரியவில்லையே'' என்று கூறிக்கவலைப்பட்டார்.

அறிந்துகொள்:- ஹாபீலைக் காபீல் கொலை செய்தபோது, அவரிலிருந்து சிந்திய இரத்தம் பூமியில் இஞ்சிப் போகாமல் ஏழுநாள் வரை இருந்தது. அப்பால், பூமியில் தண்ணீர் இஞ்சி மறைந்து போவதுபோல், அவரது இரத்தமும் இஞ்சி மறைந்துவிட்டது பிறகு, இறைவன் காபீலை நோக்கி ''உன் சகோதரர் ஹாபீல் எங்கே?'' என்று வினவினான். அதற்கு காபீல் ''நான் அறியேன், அவரை நான் காத்துக் கொண்டிருக்கவில்லை'' என்று கூறினார். அதற்கு இறைவன் ''உமது சகோதரரின் இரத்தம் பூமிக்குள்ளிருந்து என்னை அழைத்துக் கொண்டிருக்கிறது. நீர் ஏன் அவரைக் கொலை செய்தாய்?'' என்று கேட்டான். அதற்கு காபீல் ''நான் அவரைக் கொலை செய்திருந்தால், அவருடைய இரத்தம் இருக்கவேண்டுமே, அது எங்கே'' என்று பதிற்

கூறினார். அது முதல் இறைவன் இரத்தத்தைக் குடிப்பதை பூமிக்கு ஹராமாக்கி விட்டான். எனவேதான், பூமியில் இரத்தம் இஞ்சிப் போவதில்லை.

அறிந்துகொள்:- காபீல் ஹாபீலைக் கொலை செய்வதற்கு முன்னர் பறவை இனங்களும், கரடி, ஓநாய், புலி, மான் முதலிய மிருக ஜாதிகளும் ஒன்றோடொன்று சேர்ந்து மேய்ந்து கொண்டிருந்தன. அவைகள் ஒன்றுக்கொன்று வெருளுவதில்லை. ஹாபீலை காபீல் கொலை செய்தவுடன் அவைகள் வெருண்டு பலவாறு பிரிந்து பறவைகள் வானத்திலும், மான் மரைகள் காட்டிலும், கரடி புலி போன்ற கொடிய மிருகங்கள் அடர்ந்த கானகங்களிலும் சென்று விட்டன. ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திருமக்காவில் இருக்கையில், ஒரு மரத்தின் குச்சியை முறித்துப் பல் துலக்கினார்கள். அம்மரத்தின் குச்சி கசப்பாக இருந்தது. வழக்கத்திற்கு மாறாகக் கசப்பதைப் பார்த்து ''இன்று இப்புவியில் எதோ ஒரு விசேஷம் நிகழ்ந்திருக்கிறது. இதனால்தான் இது கசக்கிறது என்று எண்ணி, நமது ஹிந்து தேசத்திற்கு விரைந்து வந்தார்கள். இங்கு வந்து பார்த்ததில் ஹாபீலைக் காணவில்லை. வெண்ணிறமாக இருந்த காபீல் கருநிறமாகி இருந்தார். அவரிடம் உனது சகோதரர் ஹாபீல் எங்கே என்று அவர் வினவியதற்கு காபீல் ''நான் அவரை பார்த்துக் கொண்டிருக்கவில்லை'' என்று கூறினார். அதற்கு ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ''நீ அவரைக் கொலை செய்திருக்க வேண்டும். எனவேதான் நீ கருத்திருக்கின்றாய்'' என்று கூறினார்கள். பின்னர் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது புதல்வர் ஹாபீலை எண்ணி, நூறு வருடம் வரை கவலைப்பட்டு அழுது கொண்டிருந்தார்கள். தவிர, இக்கொலை நடந்து ஐந்து வருடங் கழித்து ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நூற்று முப்பதாம் வயதில் ஹளரத் ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறந்தார்கள். ஷீது என்பதற்கு அல்லாஹ்வின் நன்கொடை என்பது பொருள். இவர் ஹாபீலுக்கு பதிலாக இறைவனால் அளிக்கப்பட்டவர். இரவு பகல்களின் நாளிகைகளை அறியும் முறையையும், ஒவ்வொரு நாளிகையிலும் சிருஷ்டிப் பொருள்கள் வணங்குகிற விதத்தையும் இறைவன்

இவருக்குக் கற்றுக் கொடுத்ததுடன், ஐம்பது சுஹூஃபுகளையும் இவருக்கு அருளினான். இவர் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வஸீய்யாக அதாவது பிரதிநிதியாகவும், காரியகர்த்தராகவும் ஆகிவிட்டார்.

அறிந்துகொள்:- காபீலை நோக்கி "நீ துரத்தப்பட்டவனாகவும், கண்டவர்களை விட்டு அச்சமுள்ளவனாகவும் இருக்கிற நிலையில் நீ துலைந்து போ" என்று சொல்லப்பட்டது. ஆகவே, அவன் தனது சகோதரியும், ஹாபீலுடைய மனைவியுமான இக்லிமா என்ற அவ்வழகிய பெண்ணைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, யமன் நாட்டைச் சேர்ந்த அதன் (ஏடன்) என்னும் ஊருக்குச் சென்று, அவளுடன் வாழ்ந்து கொண்டிருந்தார். இப்படி இருக்கும்போது ஒருநாள் அவரிடம் இப்லீசு சென்று "ஹாபீல் நெருப்பை வணங்கி வந்தான். அதனால்தான் அது அவனுடைய குர்பானியை நெருப்புத் தின்றது. உனது குர்பானியைத் தின்னவில்லை. ஆகையால், நீயும் நெருப்பை வணங்கி வா. உனக்கும், உனது சந்ததியினருக்கும் இது வழக்கமாக வரட்டும்" என்று கூறினான். ஆகவே, காபீல் நெருப்பை வணங்கத் தொடங்கினார். பின்னர், இதரர்களும் அவரைப் பின்பற்றி நெருப்பை வணங்க ஆரம்பித்தனர். என்றாலும், அவரைப் பார்ப்பவர் ஒவ்வொருவரும் அவர் மீது கல் எறியாமலிருப்பதில்லை. காபீலுக்குக் கண் தெரியாத ஒரு புதல்வன் இருந்தான். ஒரு நாள் அக்குருடன் தன் புதல்வனுடன் சென்றபோது, காபீல் இருப்பதை அப்புதல்வன் கண்டு, குருடனான தன் தந்தையை நோக்கி, "இதோ உன் தந்தை காபீல் இருக்கிறார்" என்று கூறினான். உடனே, அக்குருடன் கற்களால் தன் தந்தையை எறிந்தான். அவ்வடியினால் காபீல் உயிர் துறந்தார். இதனைப் பார்த்த அச்சிறுவன், தன் தந்தையை நோக்கி "உன் தந்தையைக் கொன்று விட்டாயே" என்று கூறினான். ஆதலின், அவனையும் அவன் முகத்தில் பலமாகக் குத்தினான். இதனால், அச்சிறுவனும் உயிர் துறந்தான். அப்புறம் "அக்குருடன் என் தந்தையைக் கல்லாலெறிந்து கொன்றேன், என் புதல்வனைக் குத்திக் கொன்றேன்" என்று வருந்தினான்.

ரிவாயத்து:- காபீலுடைய ஒற்றைக்காலை அவரது துடையுடன் சேர்த்துக்கட்டி, கோடை காலத்தில் அக்னி மண்டலத்திலும், மாரி காலத்தில் பனி மண்டலத்திலும் சூரியன் திரும்பும் புறமெல்லாம் அவரது முகத்தைத் திருப்பி வேதனை செய்யப்படுகிறது. இவர்தான் ஆதமுடைய மக்களில் இறைவனுக்கு மாறு செய்த முதல் மனிதர். இவர்தான் எல்லாருக்கும் முதலாவதாக நரகத்தின்பால் இழுத்துச் செல்லப்படுவார் என்பதாக முஜாஹிது ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்.

رُوِیَ عَنْ اَنَسٍ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّهُ قَالَ سُئِلَ النَّبِيُّ صَلَّى
اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنْ يَوْمِ الثَّلاَثَاءِ فَقَالَ (يَوْمُ الدَّمِ فِيْهِ
حَاضَتْ حَوَّاءُ وَفِيْهِ قَتَلَ ابْنُ آدَمَ اَخَاهُ)

ரிவாயத்து:- செவ்வாய்க்கிழமையைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அது ரத்தமுள்ள நாள். அந்த நாளில்தான் ஹவ்வா அவர்களுக்கு மாதவிடாய் வந்தது. அன்றைய தினத்தில்தான் ஆதமுடைய புதல்வர் (காபீல்) தனது சகோதரரை (ஹாபீலை)க் கொலை செய்தார்" என்று கூறினார்கள் என்பதாக ஹளரத் அனஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَفِى الْحَدِيْثِ لاَ تُقْتَلُ نَفْسٌ ظُلْمًا اِلاَّ كَانَ عَلَى ابْنِ آدَمَ
الْاَوَّلِ كِفْلٌ مِنْ دَمِهَا

ஹதீது:- ஆதமுடைய முதலாவது புதல்வருக்குப் பங்கு இல்லாமல் எவரும் அநீதியாகக் கொல்லப்படுவதில்லை.

அநீதியாகச் செய்யப்படும் கொலை ஒவ்வொன்றிற்கும் ஏற்படுகிற பாவத்தில், ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது முதலாவது புதல்வர் காபீலுக்கும் ஒரு பங்கிருக்கிறது என்பது இந்த ஹதீஸின் கருத்து. ஏனெனில், இவர்தான் உலகிற்கு முதல் முதலாகக்

கொலைத் தொழிலைச் செய்து காண்பித்தவர். இவர்தான் யாஜூஜ், மாஜூஜுக் கூட்டத்தாருக்கு தந்தை. இவர்கள் துஷ்ட தந்தைக்குப் பிறந்த துஷ்ட மனிதர்கள்.

காபீலுடைய மக்கள் வீணை, தம்பூர், மேளம் முதலிய வீண் விளையாட்டுக் கருவிகளை உண்டு பண்ணி, மதுபான மருந்தல், விபச்சாரம் செய்தல், அக்னியை ஆராதனை செய்தல் முதலான தீய செயல்களில் மூழ்கி இருந்தனர். அப்பால், ஹளரத் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலத்தில் வந்த பெரு வெள்ளத்தில் அவர்கள் மடிந்தனர். ஹளரத் ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்களது சந்ததியினர் மட்டும் எஞ்சி இருந்தார்கள். ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வஃபாத்தாகும்போது அவருடைய மக்கள், பேரர் உள்பட அவரது சந்ததியினரில் ஆணும் பெண்ணுமாக நாற்பதாயிரம் பேர் இருந்தனர்.

مِنْ اَجْلِ ذٰلِكَ ۚ كَتَبْنَا عَلٰى بَنِىْٓ اِسْرَآءِيْلَ اَنَّهٗ مَنْ
قَتَلَ نَفْسًاۢ بِغَيْرِ نَفْسٍ اَوْ فَسَادٍ فِى الْاَرْضِ
فَكَاَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِيْعًا ؕ وَمَنْ اَحْيَاهَا
فَكَاَنَّمَاۤ اَحْيَا النَّاسَ جَمِيْعًا ؕ وَلَقَدْ جَآءَتْهُمْ
رُسُلُنَا بِالْبَيِّنٰتِ ثُمَّ اِنَّ كَثِيْرًا مِّنْهُمْ بَعْدَ ذٰلِكَ
فِى الْاَرْضِ لَمُسْرِفُوْنَ ۝

32. இதனாற்றான், 'எவர் ஒருவருக்குப் பகரமாக அல்லது பூமியில் விஷமஞ் செய்வதற்காக அல்லாமல் ஒருவரைக் கொலை செய்கிறாரோ, நிச்சயமாக மனிதர் அனைவரையும் அவர் கொலை செய்ததைப் போலாகி விட்டார் என்றும், அவரை எவர் வாழவைக்கிறாரோ நிச்சயமாக மனிதர் அனைவரையும் அவர்

வாழவைத்தவர் போன்று ஆகி விட்டார் என்றும் பனூ இஸ்ராயீல்கள் மீது விதித்தோம். மேலும், அவர்களிடம் நமது ரசூல்மார்கள் (தெளிவான) அத்தாட்சிகளைக் கொண்டு நிச்சயமாக வந்திருக்கிறார்கள். பின்னர், இ(வ்வாறு வந்து) தற்குப் பிறகு, அவர்களிலிருந்து பெரும்பாலானவர்கள் பூமியில் (நமது சட்டதிட்டங்களை) மீறுபவர்களாக இருக்கிறார்கள்.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது இரு புதல்வர்களது செய்தியை வேதக்காரர்களுக்கு சொல்லிக் காண்பிக்கும்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கட்டளையிட்டதன் கருத்து இந்த ஆயத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. "நியாயமில்லாமல் அதாவது கொலை செய்த குற்றத்திற்கு அல்லது உலகில் குழப்பஞ் செய்ததற்குத் தண்டனையாக இல்லாமல் ஒருவரை மற்றொருவர் கொலை செய்வாராயின் அவர் மனிதர் அனைவரையுமே கொலை செய்தவராக ஆகிவிடுகிறார். ஒருவரது உயிரைக் காப்பாற்றினால், எல்லா மனிதரது உயிர்களையும் காப்பாற்றியவராகின்றார்" என்பதாக தவ்ராத் வேதத்தில் இறைவன் கூறி இருக்கிறான். அக்கிரமமாகக் கொலை செய்வதால், இம்மை மறுமை இரண்டிலும் நஷ்டமடைவதும், ஒருவரைக் கொலை செய்தாலும், அது சகிக்க முடியாத குற்றமாகி விடுகிறதென்பதும் இந்த ஆயத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், சாதாரண மனிதரைக் கொலை செய்வதால், இத்தகைய நஷ்டங்களும் தண்டனைகளும் ஏற்படும்போது, நபிமார்களை பனூ இஸ்ராயீல்கள் அக்கிரமமாகக் கொலை செய்வதால், அவர்களுக்கு எவ்வளவு பெரிய தண்டனைகள் வரும் என்பதும், அல்லாஹுத்தஆலாவின் கோபத்திற்கு அவர்கள் ஆளாகிறார்கள் என்பதும் இந்த ஆயத்தின் மூலம் விளக்கப் பட்டிருக்கின்றன.

பனூ இஸ்ராயீல்களுக்கு தவ்ராத் வேதத்தில் கொலைக் குற்றத்தைப் பற்றித் தெளிவாக விவரித்ததுடன் நில்லாமல், ரசூல்மார்களை அத்தாட்சிகளுடன் அனுப்பி அக்கட்டளையையும், இதர திட்டங்களையும் நினைவூட்டி எச்சரிக்கை செய்து கொண்டே வந்தும்,

அவர்களிற் பெரும்பாலர் அச்சட்ட திட்டங்களை மதிக்காமல் மீறி நடந்திருக்கிறார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

إِنَّمَا جَزَٰٓؤُا۟ ٱلَّذِينَ يُحَارِبُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَيَسْعَوْنَ
فِى ٱلْأَرْضِ فَسَادًا أَن يُقَتَّلُوٓا۟ أَوْ يُصَلَّبُوٓا۟ أَوْ تُقَطَّعَ
أَيْدِيهِمْ وَأَرْجُلُهُم مِّنْ خِلَٰفٍ أَوْ يُنفَوْا۟ مِنَ
ٱلْأَرْضِ ۚ ذَٰلِكَ لَهُمْ خِزْىٌ فِى ٱلدُّنْيَا ۖ وَلَهُمْ
فِى ٱلْءَاخِرَةِ عَذَابٌ عَظِيمٌ ﴿٣٣﴾

33. அல்லாஹ்வுடனும், அவனது ரசூலுடனும் யுத்தஞ் செய்து, பூமியில் குழப்பத்தைச் செய்ய முயலுகின்றார்களே அவர்களுக்குக் கூலியானது, அவர்கள் வெட்டப்படல் அல்லது அவர்கள் தூக்கிலிடப்படல் அல்லது அவர்களது கைகளும், அவர்களது கால்களும், மாறாகத் தரிக்கப்படல், அல்லது நாடு கடத்தப்படல்தான். இது அவர்களுக்குப் பூமியிலுள்ள இழிவாகும். இன்னும், அவர்களுக்கு மறுமையில் கடுமையான வேதனை இருக்கிறது.

அல்லாஹ்வுடனும், அவனது ரசூலுடனும் யுத்தஞ் செய்பவர்கள் என்பதற்கு முஸ்லிம்களை எதிர்த்து யுத்தஞ் செய்பவர்கள் என்பது கருத்து. ஏனெனில், முஸ்லிம்கள் அல்லாஹ்விற்கும் அவனது ரசூலுக்கும் வழிப்பட்டு நடப்பதால், அவர்களை இஸ்லாமியக் கிரியைகளைச் செய்யவிடாமறறுத்து, யுத்தஞ் செய்வதாகவே இருக்கிறது. முஸ்லிம்களது பொருள்களுக்கும், மனைவிகளுக்கும், அடிமைகளுக்கும் நஷ்டத்தை விளைவித்துக் கொண்டும், முஸ்லிம்களது இரத்தத்தைச் சிந்திக் கொண்டும், பாலைவனத்தில் வசித்துக் கொண்டுமிருந்த ஒரு அறபிக் கூட்டத்தினரைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டது. இதன் விபரம் வருமாறு.

ஹிலாலுப்னு உவைமர் என்பவருக்கும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிடையில் ஒரு ஒப்பந்தமிருந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவருக்கு விரோதமானவர்களுக்குத் துணைபுரியக் கூடாது, அவருக்கும் துணை புரியாமலிருந்து கொள்ளலாம். இதற்குப் பதிலாக அவரிடம் செல்லும் முஸ்லிம்களை, அவரும் அவருடைய கூட்டத்தினரும் துன்புறுத்தக் கூடாது. இதுபோல நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் செல்வதற்காக வேறு யாரும் அவ்வழியே வந்தால், அவர்களையும் துன்புறுத்தக் கூடாது என்று உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இவ்வித நிலையில் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவவேண்டுமென்ற நோக்கத்துடன் பனூகினானா கோத்திரத்தைச் சேர்ந்த சிலர், ஹிலாலுப்னு உவைமருடைய ஜனங்கள் இருக்குமிடத்து வழியாக, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து கொண்டிருந்தனர். அச்சமயம் ஹிலாலுப்னு உவைமர் அங்கில்லை. அவரது ஜனங்கள், அவர்களை வழி மறித்து, அவர்களிடமிருந்த பொருள்களை எடுத்துக் கொண்டு, அவர்களையும் கொலை செய்து விட்டனர். இவர்கள் செய்த இக்குற்றத்திற்குரிய தண்டனை இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"உரைனிக் கூட்டத்தார் உடல் நலம் குன்றி மதீனமா நகரம் வந்தனர். ஒட்டகைக் கிடைக்குச் சென்று, அவற்றின் பாலை அருந்திக் கொள்ள நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுமதி கொடுத்தார்கள். அவர்கள் குணமடைந்த பின்னர், ஒட்டகைகளையும் பிடித்துக் கொண்டு ஓடி விட்டனர். ஆகவே, இவர்களைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டது" என்பதாக **தஃப்ஸீர் ஃபத்ஹுல் கரீமில்** சொல்லப்பட்டிருக்கிறது.

பூமியில் குழப்பஞ் செய்வதும், யுத்தஞ் செய்வதும் பல வகைப்படும். இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தண்டனைகளும் இருக்கின்றன. அதாவது பொருள்களை எடுத்துக் கொள்ளாமல், கொலையை மட்டும் செய்யலாம், பொருள்களை எடுத்துக் கொள்வதுடன் கொலையையுஞ் செய்யலாம், கொலை செய்யாமல்,

பொருளை மட்டும் எடுத்துக் கொள்ளலாம், கொலை செய்யாமல் பயமுறுத்தி இருக்கலாம். இந்நான்கு வகைக் குற்றங்களுக்கும் இந்த ஆயத்தில் தண்டிக்க வேண்டிய முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. அதாவது பொருள்களை எடுக்காமல் கொலையை மட்டும் செய்திருந்தால் பதிலுக்கு பதில் மரண தண்டனை விதிக்க வேண்டும், கொலையுடன் பொருளையும் எடுத்திருந்தால் அவர்களை உயிருடன் கழுவிலேற்றி, அவர்களது வயிறுகளில் அம்பெய்து, அவர்களை மரணிக்கச் செய்ய வேண்டும். கொலை செய்யாமல் பொருளை மட்டும் வழிப்பறி செய்து எடுத்திருந்தால், அவர்களது வலக்கைகளை மணிக்கட்டிலிருந்து எடுத்து விடுவதுடன், அவர்களது இடக்கால்களைக் கரண்டையிலிருந்து எடுத்து விட வேண்டும். ஏனெனில், அவர்கள் பொருளை எடுத்ததற்காக கையைத் துண்டிக்க வேண்டும், வழியை மறித்ததற்காக காலைத் துண்டிக்க வேண்டும். ஆனால், அவர்கள் எடுத்த பொருளைப் பாகம் செய்திருந்தால், அவர்கள் ஒவ்வொரு வருக்கும் பத்து திர்ஹத்திற்குக் குறையாத அளவிற்கு பங்கு வந்தால்தான் கையைத் துண்டிக்கலாம். இவ்விரண்டையும் செய்யாமல் பயமுறுத்தி இருந்தால், அவர்களைச் சிறையில் போடுவதன் மூலம் அவர்களை அங்கில்லாமலாக்க வேண்டும்.

إِلَّا الَّذِينَ تَابُوا مِن قَبْلِ أَن تَقْدِرُوا عَلَيْهِمْ ۖ
فَاعْلَمُوا أَنَّ اللَّهَ غَفُورٌ رَّحِيمٌ ﴿٣٤﴾

34. (ஆனால்), அவர்கள் மீது நீங்கள் சக்தி பெறுவதற்கு முன் அவர்களில் தவ்பாச் செய்தவர்களைத் தவிர, ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்பவன் (இன்னும்) கிருபை செய்பவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மேலே சொல்லப்பட்ட குற்றங்களைச் செய்தவர்கள், தங்கள் குற்றங்களைத் தாங்களாக உணர்ந்து தவ்பாச் செய்து விட்டால், அப்புறம் அவர்களைப் பிடித்து, இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்டபடி தண்டிக்கக் கூடாது. ஆனால், அவர்கள் மீது அடக்கு

முறை நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டபின், வேறு வழியில்லாமல் அவர்கள் தவ்பாச் செய்தால், அந்த தவ்பாவை ஆதாரமாகக் கொண்டு, அவர்களைத் தண்டிக்காமல் விட்டு விடக்கூடாது. இந்த தவ்பா அவர்களுக்கு இம்மையில் பயன்படாது. மேலும், இவ்வாறு தவ்பாச் செய்தவர்களுக்கு அரசாங்க தண்டனைதான் மன்னிக்கப்படுமே யன்றி, இதர மனிதர்களுடைய உரிமைகள் மன்னிக்கப்படமாட்டா. உதாரணமாக வழிப்பறி கொள்ளைக்காரர்கள் ஒருவரைக் கொலை செய்து விட்டு, அரசாங்கத்தார் கைதி செய்வதற்கு முன்னர், தவ்பாச் செய்து விட்டால், அவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது மட்டும் மன்னிக்கப்படும். ஆனால் கொலையுண்டவரது வலிகாரர்கள் அக்கொலைக்காக அவர்களிடம் நஷ்ட ஈடு வாங்கிக் கொள்ளவும், கொலைக்குப் பழி வாங்கவும், மன்னிக்கவும் உரிமை பெற்றிருப்பது இந்தத் தவ்பாவினால் நீங்கிவிட மாட்டாது. ஒருவர் வழி மறித்து, பொருளையும் அபகரித்து விட்டு, கைதி செய்யப்படுவதற்கு முன் தவ்பாச் செய்து விடுவாராயின், அவருடைய வலக்கையை மணிக் கட்டிலிருந்தும், இடக்காலை கரண்டையிலிருந்தும் துண்டித்துவிட வேண்டும் என்ற தண்டனையை நிறைவேற்றக் கூடாது. ஆனால், பணத்தைப் பறி கொடுத்தவர்களுக்கு அந்தப் பணத்தைத் திரும்பக் கொடுக்க வேண்டும்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَابْتَغُوا إِلَيْهِ
الْوَسِيلَةَ وَجَاهِدُوا فِي سَبِيلِهِ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ﴿٣٥﴾

35. ஈமான் கொண்டவர்களே, அல்லாஹ்விற்கு நீங்கள் அஞ்சுங்கள். இன்னும் அவனளவில் வஸீலாவைத் தேடுங்கள். இன்னும் நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அவனது பாதையில் நீங்கள் ஜிஹாது செய்யுங்கள்.

اتَّقُوا اللَّهَ இத்தக்குல்லாஹ அதாவது, அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள் என்பதற்கு அல்லாஹுத்தஆலாவின் வேதனையைப் பயந்து, அவனுக்கு மாறு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்பது கருத்து.

الْوَسِيْلَةَ அல்வஸீலத்து என்பதற்கு ஸாலிஹான நற்கிரியைகளின் மூலமாக அல்லாஹுதஆலாவின் சமூகத்தில் நெருங்குவது என்பது கருத்து. சுவர்க்கத்தில் சுவர்க்கவாதிகளுக்குக் கிடைக்கும் அந்தஸ்துகளில் மிகச் சிறந்தது அல்வஸீலத்து என்னும் அந்தஸ்துதான் என்பதாக அத்தாஉ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள்.

فِى الْحَدِيْثِ سَلُوا اللهَ لِىَ الْوَسِيْلَةَ فَاِنَّهَا دَرَجَةٌ فِى الْجَنَّةِ
لَا يَنَالُهَا اِلاَّ عَبْدٌ وَاحِدٌ وَاَرْجُوْ مِنَ اللهِ اَنْ يَكُوْنَ هُوَ اَنَا

ஹதீஸ்:- எனக்கு வஸீலாவைத் தரும்படி நீங்கள் அல்லாஹ்விடம் கேளுங்கள். ஏனெனில், அது சுவர்க்கத்தில் ஒரு பதவி. அதனை ஒரே ஒரு அடியாரைத் தவிர வேறு யாரும் அடைய முடியாது. அந்த ஒரு அடியார் நானாக இருக்க வேண்டும் என்பதாக அல்லாஹ்விடம் நான் ஆதரவு வைக்கிறேன் என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

فِى الْحَدِيْثِ مَنْ قَالَ حِيْنَ يَسْمَعُ النِّدَاءَ اَللّٰهُمَّ رَبَّ هٰذِهِ
الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلَاةِ الْقَائِمَةِ آتِ سَيِّدَنَا مُحَمَّدًا
الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَابْعَثْهُ الْمَقَامَ الْمَحْمُوْدَ الَّذِىْ وَعَدْتَّهُ
حَلَّتْ لَهُ شَفَاعَتِىْ يَوْمَ الْقِيَامَةِ

அதான் என்னும் பாங்குச் சப்தத்தைக் கேட்கும்போது, "நாயனே, பரிபூரணமான இந்த பிரார்த்தனைக்கும் நிலையான தொழுகைக்கும் உரியவனே, எங்களது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வஸீலாவையும், ஃபலீலத் என்னும் மேன்மையையும் கொடுப்பாயாக. இன்னும் அவருக்கு நீ வாக்களித்திருக்கிறதாகிய மக்காமுல் மஹ்மூது என்னும் புகழப்பட்ட அந்தஸ்தில் அவரை எழுப்புவாயாக" என்று எவர் கூறுகிறாரோ அவருக்கு கியாமத்து நாளில் எனது ஷஃபாஅத்து ஹலாலாகி விட்டது என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள் என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

மௌலல் பனாரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சூரத்துல் ஃபாத்திஹாவிற்கு எழுதியுள்ள தப்ஸீரில் இதனைக் குறித்து "இது அத்னு என்னும் சுவர்க்கத்திலுள்ள ஒரு உயர்தரமான அந்தஸ்து. இது நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அவர்களுடைய உம்மத்துகளின் துஆவின் மூலமாகக் கிடைத்திருக்கிறது. உம்மத்துகளது துஆவின் மூலம் இதனை அவன் அளித்ததற்கு ஒரு காரணமுண்டு. அக்காரணத்தை அவன் நமக்கு மறைத்து வைத்திருக்கிறான். இந்த நபியின் காரணமாக நாம் சீதேவித்தனத்தை அடைந்திருக்கிறோம். இவரைக் கொண்டு நாம் சிறந்த உம்மத்துகளாக்கப் பட்டிருக்கிறோம். நபிமார்களை அனுப்புவதை இவர்களுடன் இறைவன் முத்திரையிட்டது போல நம்மைக் கொண்டு அல்லாஹுத் தஆலா முத்தரை யிட்டுவிட்டான்" என்பதாக கூறி இருக்கிறார்கள்.

وَجَاهِدُوْا "நீங்கள் ஜிஹாது செய்யுங்கள்" என்ற வாக்கியத்திலுள்ள ஜிஹாது இரண்டு வகை. புறத்திலுள்ள பகைவர்களை எதிர்த்து யுத்தஞ் செய்வது ஒரு வகை. அகத்திலுள்ள பகைவர்களாகிய மிருக உணர்ச்சிகளை எதிர்த்து யுத்தஞ் செய்வது மற்றொரு வகை.

உண்மையான வெற்றியை இறைவன் நான்கு காரியங்களில் வைத்திருக்கிறான். 1. ஈமான். இதனைக் கொண்டுதான் மனிதன் குஃப்ரு என்ற இருளின் திரையை விட்டு விடுதலை யடைகிறான். 2. தக்வா. இது ஷரீஅத்தின் கிரியைகளுக்கும் நன்னடத்தைகளுக்கும் ஊற்றுக் கண்ணாகும். இதன் மூலமாகத்தான் மனிதன் பாவம் என்னும் இருளை விட்டு விடுதலையடைகிறான். 3. வஸீலாவைத் தேடுவது. இது இறை சக்தியின் மூலமாக ஸ்தூல சக்தியை அழிப்பது. இதன் மூலமாகத்தான் இந்த உஜூதின் தன்மைகளுக்குரிய இருளை விட்டு விடுதலையடைய வேண்டும், 4. ஜிஹாது, அல்லாஹுத்தஆலாவின் ஹுவிய்யத்தை ஸ்திரப்படுத்துவதில் "நான்" என்ற எண்ணத்தை அழித்துவிடுதல். இதன் மூலமாக உஜூதின் இருளைவிட்டு மனிதன் விடுதலையடைந்து, ஷுஹூது என்னும் பிரகாசத்தைக் கொண்டு வெற்றியடைகிறான் என்பதாக **தாவீலாத்துன்னஜ்மிய்யா** என்ற நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- வஸீலாவைத் தேடவேண்டும் என்பதாக இந்த ஆயத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நமக்கு அவசியமாக அது இருக்க வேண்டும். ஏனெனில், வஸீலா இல்லாமல் அல்லாஹுத்தஆலாவின்பால் சேருவது முடியாத காரியம். இந்த வஸீலாதான் பாரவான்களான ஹக்கீக்கத்துடைய உலமாக்களும், தரீக்கத்துடைய மஷாயிகுகளுமாவர்.

إِنَّ الَّذِينَ كَفَرُوا لَوْ أَنَّ لَهُم مَّا فِي الْأَرْضِ جَمِيعًا
وَمِثْلَهُ مَعَهُ لِيَفْتَدُوا بِهِ مِنْ عَذَابِ يَوْمِ الْقِيَامَةِ
مَا تُقُبِّلَ مِنْهُمْ ۖ وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌ ﴿٣٦﴾

36. நிச்சயமாகக் காஃபிரானார்களே அவர்கள் கியாமத்து நாளின் வேதனை (யை விட்டுத் தப்பித்து)க் (கொள்வதற்)காக, நிச்சயமாக அவர்களுக்கு பூமியிலுள்ள அனைத்தையும், அதனுடன் அதைப் போன்றதுமிருந்து அதனை அவர்கள் பரிகாரங் கொடுத்தாலும், அவர்களிலிருந்து அது அங்கீகரிக்கப்படமாட்டாது. மேலும், அவர்களுக்கு நோவினை செய்யும்படியான வேதனை இருக்கிறது.

காஃபிரான ஒவ்வொருவருக்கும் இவ்வுலகிலுள்ள செல்வமனைத்தும், அதனைப் போன்ற செல்வமும் இருந்து, கியாமத்து நாளின் வேதனைக்குப் பதிலாக அவற்றை அவர்கள் கொடுத்தாலும், அவர்களிடமிருந்து அது ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. அவர்கள் அவ்வேதனையை எவ்விதத்திலும் விலக்கிக் கொள்ள முடியாது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

ஹதீஸ்:- கியாமத்து நாளில் காஃபிரைக் கொண்டு வந்து, "உனக்குப் பூமி நிறம்பத் தங்கமிருந்தால், அவைகள் எல்லா வற்றையும் ஈடு கொடுத்துத் தப்பித்துக் கொள்ள விரும்புவாயா?" என்று வினவப்படும். அதற்கு அவன் "ஆம்" என்று கூறுவான். அப்பொழுது, அவனை நோக்கி "இதனைப் பார்க்கினும் மிகச் சுலபமானதை

A7

உன்னிடத்தில் கேட்கப்பட்டது" என்று கூறப்படும். அதாவது, அல்லாஹுத்தஆலாவிற்கு இணை வைப்பதை விட்டுவிடும் படியும், ஷஹாதத்துக் கலிமாவை ஒப்புக் கொள்ளும்படியும் சொல்லப்பட்டது. இவ்விரண்டும் மிகச் சுலபமாக இருந்தும் இவற்றை நீ உலகில் செய்ய மறுத்து விட்டாய் என்பது இந்த ஹதீஸின் கருத்து.

يُرِيدُونَ أَن يَخْرُجُوا مِنَ النَّارِ وَمَا هُم بِخَارِجِينَ
مِنْهَا ۖ وَلَهُمْ عَذَابٌ مُّقِيمٌ ﴿٣٧﴾

37. (நரக) நெருப்பை விட்டு அவர்கள் வெளியேறுவதற்கு அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் அதனை விட்டு வெளியேறுகிறவர்களாக இல்லை. மேலும், அவர்களுக்கு நிரந்தரமான வேதனை இருக்கிறது.

நரகத்தை விட்டு வெளியேற முடியாமலிருக்கிற நிலையில் அதனை விட்டு அவர்கள் வெளியேற விரும்புவார்கள். அவர்களுக்கு நிரந்தரமான வேதனை இருக்கிறது. அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக வேதனை செய்யப்படுவார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

ரிவாயத்து:- "கியாமத்து நாளில் தும்பை ஆட்டின் உருவத்தில் மரணத்தைக் கொண்டு வந்து சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கு மிடையில் அறுக்கப்படும்". ஏனெனில், மரணம் என்பது இனி இல்லை. அது எடுபட்டு விட்டது என்பதைச் சுவர்க்கவாதிகளும் நரக வாதிகளும் நேரடியாகப் பார்த்துக் கொள்வதற்காக, இவ்வாறு ஆட்டின் உருவத்தில் கொண்டு வந்து அறுக்கப்படும். இதனைப் பார்த்த பிறகு சுவர்க்க வாதிகளுக்குச் சந்தோஷம் அதிகமாகும், நரகவாதிகளுக்கு துக்கம் அதிகமாகும்.

وَالسَّارِقُ وَالسَّارِقَةُ فَاقْطَعُوا أَيْدِيَهُمَا جَزَاءً بِمَا
كَسَبَا نَكَالًا مِّنَ اللَّهِ ۗ وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ ﴿٣٨﴾

38. தவிர, திருடுகிறவனும் திருடுகிறவளும். அவ்விருவரும் சம்பாதித்ததற்குக் கூலியாக, (இன்னும்) அல்லாஹ்விலிருந்துள்ள வேதனைக்காக, அவ்விருவரது கைகளை நீங்கள் துண்டித்து விடுங்கள். மேலும், அல்லாஹ், மிகைத்தவன் (இன்னும்) விவேகமுள்ளவன்.

இங்கிருந்து திருட்டுத் தொழிலைச் செய்தவர்களுக்கு இஸ்லாமிய ஷரீஅத்தில் விதிக்கப்படும் தண்டனையைப் பற்றிய விபரம் கூறப்படுகிறது. கைகளை வெட்டுங்கள் என்பதற்கு இரண்டு கைகளையும் வெட்டி விட வேண்டும் என்பது கருத்தல்ல. திருடர்களது வலக்கரங்களை வெட்ட வேண்டும். இதனைப் பற்றிய முழுவிபரங்களை ஃபிக்ஹு என்னும் மார்க்கச் சட்ட கிரந்தங்களில் காண்க.

فَمَنْ تَابَ مِنْ بَعْدِ ظُلْمِهِ وَأَصْلَحَ فَإِنَّ اللَّهَ يَتُوبُ عَلَيْهِ إِنَّ اللَّهَ غَفُورٌ رَحِيمٌ ۝٣٩

39. ஆகவே, எவர் தனது அக்கிரமத்திற்குப் பிறகு, தவ்பாச் செய்து, (தன்னைத்) திருத்திக் கொண்டாரோ, நிச்சயமாக அல்லாஹ் அவருடைய தவ்பாவை அங்கீகரிக்கிறான். நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்பவன், (இன்னும்) கிருபை செய்பவன்.

பிறருடைய பொருளை எடுப்பது பொருள்காரருக்கு அக்கிரமஞ் செய்வதாக இருப்பதால், இந்த ஆயத்தில் திருட்டுத் தொழிலுக்கு அக்கிரமம் என்று சொல்லப்பட்டது.

திருடியவர் திருட்டுத் தொழிலை அடியுடன் விட்டுவிட்டு, உண்மையாகவே தவ்பாச் செய்துவிட்டால், அக்குற்றத்திற்காக கியாமத்து நாளில் வேதனை செய்யப்படமாட்டாது. அவரது தவ்பாவை இறைவன் அங்கீகரித்துக் கொள்வான். என்றாலும், திருடப்பட்டவரது உரிமையைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கத்தில் அவரது கை துண்டிக்கப்படும்.

ஆனால், "திருட்டு வழக்கு அதிகாரிகளிடம் போவதற்கு முன்னதாகவே திருடப்பட்ட பொருளைத் திரும்பக் கொடுத்துவிட்டால், அவரது கையைத் துண்டிக்கக் கூடாது. அதிகாரிகளிடம் வழக்குப் போட்ட பிறகு, திருட்டுப் பொருட்கள் திரும்பக் கொடுத்தாலும், அவரது கையைத் துண்டிப்பது வாஜிபு" என்பதாக ஹத்தாதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள்.

أَلَمْ تَعْلَمْ أَنَّ اللَّهَ لَهُ مُلْكُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ يُعَذِّبُ مَنْ يَشَاءُ وَيَغْفِرُ لِمَنْ يَشَاءُ وَاللَّهُ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ ۝٤٠

40. நிச்சயமாக அல்லாஹ், அவனுக்கு வானங்களுடையவும், பூமியினுடையவும் அரசுரிமை இருக்கிறதென்பதை நீர் அறியவில்லையா? அவன் நாடுகிறவரை வேதனை செய்வான். இன்னும், அவன் நாடுகிறவரை மன்னிப்பான். மேலும், அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் பேராற்றலுள்ளவன்.

திருடியவரது வலக்கரத்தைத் துண்டித்துவிடும்படியும், தவ்பாச் செய்யாமல் மரணித்தவருக்கு மறு உலகில் வேதனை இருக்கிறதென்றும் கட்டளையிட்ட பிறகு, அவன் நினைத்தவருக்கு மன்னித்து, நினைத்தவரை வேதனையும் செய்வான் என்ற விபரத்தை இங்கு கூறி இருக்கிறான். ஏனெனில், அவன் நாயனாகவும், றப்பாகவும், மாலிக்காகவும் இருக்கிறான். மாலிக்காக அதாவது உடமையஸ்தனாக இருப்பவனுக்குத் தனது உடமைப் பொருளைத் தனது இஷ்டம் போல் செய்வதற்கு உரிமையுண்டு.

தவிர, திருட்டுத் தொழில் சம்பந்தமாகவுள்ள இந்த ஆயத்தில் "திருட்டுத் தொழிலைச் செய்பவன்" என்று ஆடவனை முதலிலும், விபச்சாரம் சம்பந்தமாகவுள்ள ஆயத்தில் "விபச்சாரம் செய்பவள்" என்று பெண்ணை முதலிலும் கூறி இருப்பதற்குக் காரணமென்ன வெனில், திருட்டுத் தொழில் பலத்தினால் செய்ய வேண்டிய